# அஞ்சலி

நிர்வாக ஆசிரியர்: ஏ.எம். செல்வராஜ்



புத்தாடை அணிந்து
புத்தாண்டைச் சிறப்பிக்க
உங்களை அன்புடன்
அழைக்கிறது

ராம் பிரதர்ஸ்

வருடம் ஒருநாள் வரும்
இந்தத் திருநாள்
இதை
சிறப்புடன் கொண்டாட
சிறந்த ஜவுளிகளைத் தெரிவு
செய்யச் சிறந்த இடம்.

ராம் பிரதர்ஸ்

உங்களுக்குத் தேவையான
சகல விதமான பிடவைக
ளைக் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள



# ராம் பிரதர்ஸ்

140, மெயின் வீதி,

கொழும்பு 11

தொலைபேசி: 20127

ஆடவர், மகளிர், குழந்தைகளுக்கேற்ற நவரகமான பிடவைகள், ரெடிமேட் உடுப்புகள், குடைகள் ஆயிரக்கணக்கான தினுசுகளில் கிடைக்கும் இடம் . . .

★ ★ ★

நைலோன் பிடவைகள் மணிபுரி சாரிகள், தினசரி பாவனைக்குகந்த உயர்ந்த ரக சாரிகள் கிடைக்கும் இடம் . . .

★ ★ ★




தரத்திற்கும் சேவைக்கும்
புகழ்பெற்ற இடம் . . .

**விஜயா கார்ப்பரேஷன்**

243, மெயின் வீதி,
கொழும்பு-11.

போன்: 27359

## மங்கள எழில் பொங்கும் மங்கையர்க் கேற்ற



- ✱ மணிபுரி சேலைகள்
- ✱ பிரிண்டட் நைலெக்ஸ் சேலைகள்
- ✱ பிளெய்ன் பட்டர் நைலோன், நைலோன் சட்டின், நைலெக்ஸ் மற்றும் அழகிய பிரிண்ட் வாயில் டெக்கா சாரிகள்
- ✱ ஆடவர் விரும்பும் டெரிபூல், டெட்ரோன், பொலிகொட் சூட்டிங்குகள் டெரிலீன், டெரிகொட்டன், சேட்டிங்குகள், சேட்டுகள்.
- ✱ குழந்தைகளுக் கேற்ற பட்டாடைகள், பிளீட்டட் கவுன்கள் விசேஷ வைபவங்களுக்கான ஆடைகள்.
- ✱ வண்ணக் கதவுச் சீலைகள், அனைத்தையும் ஒரே இடத்தில்தேர்ந்தெடுப்பதற்கு விஜயம் செய்யுங்கள்!

# சரவணாஸ்

(பிரபல கல்யாண சேலை விநியோகஸ்தர்கள்)

148, மேயின் வீதி,

கொழும்பு 11.

தொலைபேசி எண்:- 20077

நம்பிக்கையான

உத்தரவாதமான

அச்சடிப்



பிடவைகளுக்குச்

சிறந்த

இடம்

★

# விஜயா இன்டஸ்ரி

201, கிரேண்ட்பாஸ் வீதி

கொழும்பு 14.

டெலிபோன் : 20027

BLUE BIRD SEWING THREAD
60

நூல்களில் தரம் வாய்ந்ததும்
மக்கள் விரும்புவதும்
'நீலக் குருவி' மார்க்

# தையல் நூலே

★

எங்கும் கிடைக்கும்

★ ★

கலர் போலைகளும் 1000 யார் 500 யார்
டியூப்களும் போத்தாண் தினுசுகளும்
சகாய விலைக்குக் கிடைக்கும்

BLUE BIRD SEWING THREAD
40

## ஜுனைது அன் கம்பெனி

227, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12.

# அஞ்சலி

மாத சஞ்சிகை

சாதாரண௵ பங்குனி ௴ * * * மார்ச் ௴ 1971


## உள்ளே . . .


தலையங்கம் ... ... ... 7

**கதைகள்**

கடல் அலைகள் குமுறுகின்றன ... ... ... 9
(எஸ். அகஸ்தியர்)

நான் தேசத் துரோகி அல்ல ... ... 19
(குப்பிழான் ஐ சண்முகன்)

நானும் ரிக்ஷாக்காரனும் ... ... ... 27
( மொழிபெயர்ப்பு: எஸ். எம். ஜே. பைஸ்தீன்)

ஞானப்பிரவேசம் ... ... ... ... ... 31
(மு. சிவலிங்கம்)

ஒரு நாய்ப் பயல் ... ... ... ... ... 37
(யோ. பெனடிக்ற் பாலன்)

**கவிதைகள்**

இருபத்தெட்டு ... ... ... ... ... 23
(ஃ. சாத்தனுர்)

இதுவா நன்றிக்கடன் (சாரணையூம்) 35

**கட்டுரைகள்**

வத்தளையிலிருந்து புத்தளம் வரை 25
பேச்சுமொழி (அ. வி. மயில்வாகனம்)

நாடகக்கலை—கோட்பாட்டுத் தெளிவுக் 43
கான ஒரு குறிப்பு (கலாநிதி கா.சிவத்தம்பி)

**நாடகம்**

மனைவாசம் ... ... ... ... ... ... 47
(சொக்கன்)



நிர்வாக ஆசிரியர்:

ஏ. எம். செல்வராஜா

★

அலுவலகம்:

198, நீர்கொழும்பு வீதி,
வத்தளை.


★ ★

சந்தா விபரம்:

அரை வருடம் ரூ 3-00
ஒரு வருடம் ரூ 6-00



இந்த இதழில் வெளிவரும் கதைகள், கவிதைகள் ஆகியவற்றில் உள்ள பெயர்கள் யாவும் கற்பனையே. படைப்புகளில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கு அவற்றின் ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.




மிளகாய் பயிரிடுவோம் வாரீர்!

அஞ்சலி

மலர்: 1

இதழ்: 3

# மாற்றத்தின் விளிம்பில் . . .

பாரதத்தில் பொதுத்தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன. திருமதி இந்திரா காந்தியின் தலைமையிலான காங்கிரசுக்கு லோக சபையில் மூன்றில் இரண்டு பங்குக்கும் கூடுதலான இடங்களில் அமோக வெற்றி கிட்டியுள்ளது. நமது அண்டை நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற சூழ் நிலை சில காலமாக உருவாகி வருவதை அவதானித்த எவரும் அதையிட்டுக் கவலையடையாமல் இருந்திருக்க முடியாது. கொள்கை எப்படியிருப்பினும், இந்தியாவில் வலிமைமிக்க ஒரு அரசாங்கம் அமைக்க வழி ஏற்பட்டிருப்பது நல்லெண்ணம் படைத்தோர் எவருக்கும் மகிழ்ச்சி அளிப்பதாகும். நாட்டில் ஒழுங்கான நிர்வாகம் ஏற்படுவதற்கும், சர்வதேச அரங்கில் இந்தியாவின் குரல் முன் போன்று ஓங்கி ஒலிப்பதற்கும் நடந்து முடிந்த தேர்தல்கள் வழி வகுத்துள்ளன. இது நாம் அனைவரும் வரவேற்க வேண்டியதாகும்.


இம் மகத்தான வெற்றி பெருமளவு இந்திரா காந்தியின் தனிப்பட்ட வெற்றியே என்று அரசியல் வட்டாரங்கள் கூறினாலும், திருமதி காந்தி அடக்கத்துடன் அதனை மறுக்கிறார். இவ் வெற்றியானது தான் தலைமை தாங்கும் கட்சியின், சமூக—பொருளாதாரக் கொள்கைத் திட்டங்களுக்கு மக்களால் அளிக்கப்பட்ட ஒருமுகமான ஆதரவையே குறிக்கிறது என்கிறார் திருமதி காந்தி. அவர் கூற்றை, இந்திய அரசியலை உன்னிப்பாகக் கவனித்து வருபவர்கள் மறுக்க முடியாது. சுதந்திரமடைந்து பல ஆண்டுகள் கடந்தும், கோடிக் கணக்கான மக்கள் சுதந்திரத்தின் பலனை அனுபவிக்க முடியாது வாழ்க்கையின் அடித்தளத்திலேயே அல்லலுறும் அவல நிலை இன்னும் பாரத நாட்டில் நிலவுகின்றது. இந் நிலையைப் போக்கும் ஒரு சின்னமாகவே திருமதி காந்தியை இந்திய மக்கள் இன்று கருதுகின்றனர். அவரது கட்சியின் கொள்கைத் திட்டங்கள் தமது வாழ்க்கை நிலையை உயர்த்தும் எனக் கருதியே, அத் திட்டங்களைத் தடங்கலின்றி அமுல் நடத்துமுகமாக அவரது கட்சிக்கு மக்கள் வாக்களித்துள்ளார்கள். நமது பிரதமர் கூறியுள்ளதுபோல ''இந்திய மக்களின் வறுமையை அகற்றுவதற்காகத் திருமதி காந்தி சோஷலிஷ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்பதனை உணர்ந்த மக்கள் அவருக்குத் தமது மகத்தான ஆதரவை அளித்துள்ளனர்.'' இத் தேர்தலின் மூலம் இந்திய மக்கள் பொருளாதார சமூக ரீதியில் பெரும் மாற்றம் காண விழைவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. இன்றுள்ள நிலையில் அந்நாட்டில் இம் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு எல்லாத் தகுதியும் பெற்று விளங்குகின்றார் திருமதி காந்தி.

இந்தியாவில் ஏழை—பணக்காரர்களுக்கிடையிலான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கப் போவதாகத் திருமதி காந்தி இந்நிலையில் அறிவித்திருப்பது தன் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பின் தன்மையை அவர் நன்குணர்ந்திருப்பதையே காட்டுகின்றது.

ஆகவே நடந்து முடிந்த பொதுத் தேர்தல் இந்தியாவைப் பொறுத்தவரையில் ஒரு மைல் கல்லாக அமையப் போகின்றது என நாம் எதிர்பார்க்கலாம்.


மாறுதல்கள்
உங்கள் அபிமான எழுத்தாளர்
தெளிவத்தை ஜோசப்
எழுதும் தொடர்கதை
ஆரம்பமாகிறது!
அடுத்த இதழில்

# கடலலைகள் குமுறுகின்றன!



**எஸ். அகஸ்தியர்**

செக்கல் பொழுது. ஊருக்கு தெற்கேயுள்ள கடலோரச் சுடுகாடும் உறைந்து விட்டது; கடல் அம்மாறு போட்டுக் கொண்டிருந்தது.

கிராமத்து வயல் எல்லைகளில் நாய்கள் கடல் உறுமி போல் ஊளையிட்டுக் கேட்டது.

மேகத்திரைகள் கொண்டல் பக்க வாட்டாகக் கவிந்து மேற்கு வானம் ஒரே கனவாய் மை நிறமடித்துத் தெரிகிறது. வானத்தில் இடி முழக்கம் மின்னி அதிர்கிறது. செவ்வானம் நிறமழிந்து எங்கும் கருமை கூட்டும் அந்தகாரம்.

கொண்டலடியோடு பெய்த மழையும் வீசிய சுழற்காற்றும் இன்னும் ஓயவில்லை.

''த்கு, என்ன குளிரப்பா?'' என்று மண்டா ஏறிய திருக்கைபோல் தேகம்

'திக்'கிட முற்றத்தில் வந்து நின்று எட்டுத்திக்கும் பார்த்தான் தம்பி முத்து.

'சீர்வம்பு இன்னும் சமாளிக்கப்பட்டு வரேல்ல' என்று முணுமுணுத்தது வாய். சர்வாங்கம் அசைவற்று நின்றது.

குடிசைக்குள்ளே குருவிப்படுத்திருக்கின்ற குழந்தைகளைப் பார்த்தான்.

அவர்களின் எக்கிய வயிறுகள் கிழிட்டுத்தாழ, நெஞ்சுப்பாள எலும்புகள் சுருமுட்களைப்போல் பீறிட்டுப் புடைத்துக்கிடந்தன.

அவன் கண்கள் இரங்கிக் கசிந்தன.

மழை ஓய்வதாக இல்லை.

'இதென்ன வெள்ளிடி. ஊரவனைப் பிழைக்கவிடாமல் குடாவலையைப் போட்டு மனவலெண்டவன் பக்கத்தாலே கெடுக்கிறானெண்டு பாத்தா இந்த மழைத் தண்ணி வந்து ஒரே மூடமாகப் பிடிச்சுக் கொண்டிருக்கே' என்று தங்கம்மா தனக்குள் கறுவிக்கொண்டே புருஷனைப் பார்த்தாள்.

அப்போது மாதா கோயில் திருந்தாதி மணியோசை 'கணீ'ரென்று கேட்டது

தம்பிமுத்து நெஞ்சிலும் நெற்றியிலும் தொட்டுச்சிலுவை போட்டுச் சொண்டுகளை அருக்கூட்டிக் கொண்டான்.

அப்போது யாரோ தெருவின் படலையில் நின்று கூப்பிடும் அரவம் கேட்டு, நாய் குரைத்துக் கொண்டு ஓடிற்று.

தம்பி முத்து ''ஆரது?'' என்று கேட்டவனாக நடந்தான்.

சிமியோனப்பா வடிக்கலும் நூலுமாகத் தெருவில் நின்று கொண்டிருந்தார்.

''உப்பிடி ஆத்துப்பறந்து வாறாய் என்னண்ணை சங்கதி?'' என்று கேட்டான் தம்பிமுத்து.

''சீர் வம்பெண்டு ஒக்கம வீடுகளுக்கு அடைஞ்சு கிடக்கிறம். அவன் மனவல் அடைப்பு வலையோட எப்பவோ போட்டானும். நெடுகக் கண்ணை மூடிக் கொண்டிருந்தால், நாங்கள் சீவிக்கிறேல்லியே?''

''விளங்கேல, விளப்பமாகச் சொல்லண்ணை''

''என்னத்தைச் சொல்றது. ஊர் கூடி நடுக்குறிச்சிக்க கூட்டம் வைச்சு, எல்லாரும் ஒண்டாக் கூடி ஒரு முடிவு எடுத்தாத்தான் மனவலை மட்டந் தட்டலாம்.''

''அதானண்ணை நல்லது''

''என்ன முடிவு எடுக்கப் போறியள்?'' என்று ஆவலோடு கேட்டாள் தங்கம்மா.

''கூட்டத்தில் பேசின புறகுதான் தெரியும்''

அப்போது நாய் 'வெடுக்' கென்று மறுபடியும் வாயோச்சமாகக் குரைத்தது.

தங்கம்மா தெருப்படலையைத் திறந்து பார்த்தாள்.

தெருவோரமாக துரைராசா நின்றான்.

''அங்க ஆக்களெல்லாம் வந்திட்டினம். உவே உங்க என்ன செய்து கொண்டிருக்கினம்?'' என்று துரைராசா சீறுமுரல் மாதிரி எரிந்து விழுந்தான்.

அவன் போட்ட சத்தம் சிமியோனப்பா காதில் விழுந்தது.

''தம்பி துரைராசா, தம்பிமுத்துவையும் கூட்டிக்கொண்டு வாறன். எல்லோரும் கூடி நில்லுங்கோ'' என்றார் அப்பா.

துரைராசா திரும்பிய கையோடு' சிமியோனப்பாவும் தம்பி முத்துவும் புறப்பட்டார்கள்.

அப்போது மழை சாடையாக ஓய்ந்துகொண்டு வந்தது.

சிமியோனப்பாவும் தம்பிமுத்துவும் நடுக்குறிச்சிக் குள்ளே இறங்க முன்பே கூட்டம் தொடங்கிவிட்டது. பத்து எட்டுப் பேரைவிட அநேகமாக எல்லோரும் குழுமிவிட்டார்கள்.

கூட்டத்தின் நடுவே ஒரு கேஸ் லாம்பு. அதைச் சுற்றி வளைத்துக் கொண்டு சிலர் தனக்கு முன்னே உவப்பான கன்னையார் சகிதம் குந்திக் கொண்டார்கள். அயல் வீட்டு அக்

கம் பக்கப் பெண்கள் 'ஓட்டுவியனம்' கேட்கிற தோரணையில் வேலி வரிச்சுக்கு மறைவில் சள்ளை கட்டி 'விடுதி' வைத்து, இரண்டு பெண்களுக்கு நடுவில் ஒரு வெற்றிலைப் பெட்டி வீதம், நாலு ஆறு வெற்றிலைப் பெட்டிகள் சூழ இருந்தார்கள். ஓரேகண்ட சீருக்குக் கதை.

''நேரத்தை ஏன் மினைக்கெடுத்திறியள். இனித் துவங்குங்கோவன்'' என்று உசார் கூட்டினுர் சிமியோனப்பா.

கூட்டத்தின் கவனத்தைத் திசை திருப்புமுகமாக அடுத்த வீட்டுக் குசினியில் சட்டிபானை தட்டப்படுகிற சத்தம் கேட்டது.

''ஆ, கொழிஞ்சுபோவான்ர பூனை யாக்குமடி?'' என்று அள்ளிப்பிடித்த சேலையும் இள்ளி எறிந்த தாவணியுமாகத் துள்ளிக் கொண்டு ஓடினுள் பொன்னரியம்.

விளக்கைப் பிடித்துப் பார்த்தாள். பூனை நக்கிய சட்டி, விளமீன் செதில்கள் போல் பளபளத்தது. திட்டும் வசைவுமாக வாய் புறுபுறுத்தது.

''ஆ, இஞ்சால சீர்வம்பு ஒரு பக்கம். அங்கால அவன் மனவலின்ர கொடுவாந்திரியம் மறுபக்கம். நாய் பூனைகளும் வீட்டில் கிடக்கிறதைவைச் செடுக்க விடுகுதுகளில்லை''

இந்தச் சங்கடத்துக்குள்ளே கூட்டத்தை நடத்துவதற்குத் தலைவர் தெரிவில் துரைராசாவுக்கும் முத்துராசாவுக்கும் 'தகருறு' என்று மூண்டு நூர்ந்தது.

''கூட்டம் துவங்கிறதுக்கே இப்புடிச் களைபுளப்படுறீங்கள், எக்கணம் மனவலின்ற சங்கதியை எப்பிடிப்பேசி முடிக்கப் போறியள்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டுவிட்டுக் கூட்டத்தில் கண்ணோட்டம் விட்டான் தம்பி முத்து.

''சரி சரி, ஒருதரையொருதர் காச்சுமூச்சுப்படாமல் ஏதேன் நல்ல யோசனை சொல்லுங்கோ'' என்று சிமியோனப்பா கூட்டத்தைத் திசை திருப்பினுர்.

''இதில வில்லங்கம் என்னெண்டால், எங்களுக்கை ஒற்றுமை இல்லாததுதான்'' என்று வந்தது ஒரு குரல்.

''அதையும் இதில பேசித் தீர்ப்பம்'' என்றது மறுகுரல்.

''கடலில ஆரும் போய் பிழைக்கலாமெண்டு கவுண்மேந்து சட்டம் வைச்சிருக்கேக்க, நாங்கள் மனவலிட்ட, 'நீ உந்தக் குடாவலையைப் போடாதை' யெண்டு எப்பிடி ஞாயம் கேக்கிறது?'' என்முன் தம்பி முத்து.

''அப்பவே மனவல் கடலை மறிச்சு அந்தக் குடாவலையைப் போடேக்க சொல்லியிருக்கலாம். இப்ப உழைச்சு உரிசை கண்டிட்டான். பொதுச் சொத்தை தனிய அள்ளுற ஆசை இருக்கே அது செத்தாலும் போகாது. இப்ப ஆளும் மாறி அவன்ர குணமும் மாறிப்போச்சு'' என்ற கருத்தைத் தம்பி முத்துவே மீண்டும் சொன்னுன்.

''அதுக்கு இனி ஒரு வழிதான் இருக்கு''

''என்னது''

''எல்லாருமாச் சேர்ந்து அவன்ர குடாவலையைப் புடுங்கி எறியிறது தான்''

இப்படி அபிப்பிராயம் வந்த அடுத்த கணமே ஒரு குரல் கமாரிட்டது.

''டேய், குழப்புங்கோடா கூட்டத்தை''

சூசை அண்ணர் ஆடி அவிழ்ந்த தனது கொண்டையில் கைவைத்தபடி உருக்கொண்டு சன்னதமாடினுர்.

''எடி ஆத்தே, சூசை மனுசனுக்கு என்னவாமடி?''

சிரிப்புக்கும் ஏக்கத்திற்கும் இடையில் பொன்னரியம் கேட்ட ஒலி சிமியோனப்பாவின் காதில் விழுந்தது.

'சூசை மனவலின்ர கையாள்' என்று அப்போது ஒரு குரல் கம்பீரித்த போது எல்லோரும் ஓடி முழிசினுர்கள்.

''டேய், டாம் பூள். கெற்றவுட்'' என்று சூசையண்ணரைப் பார்த்துக் கத்தினுன், ஹோல்டிங் சிவலை ரத்தினம்.

கொய்க் கிளைமாதிரி கூட்டம் அல்லோலகல் லோலப் பட்டுக் கலைந்தது.

பொழுது பூமிக்குள் உறைந்து கொண்டிருந்தது.

வேலிக் கடப்பில் நின்று சிமியோனப்பா 'கூய்' போட்டுக் கூவுகிற குரல் கேட்டுத் தம்பிமுத்து, ''அண்ணே, இந்தா நான் வெளிக்கிட்டிட்டன். நீங்கள் முன்னுக்குத் துறைக்குப் போய் கம்புதடி கம்பாயங்களை எடுத்து வள்ளத்தில வையுங்கோ'' என்று பறதியாகச் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

''இம்மட்டு நாளாக மழை காத்தோட வீட்டுக்க கிடந்திட்டு இண்டைக்கென வெளிக்கிட்டிருக்குதுகள். மனவலும் இண்டைக்குப் பாத்துப் போறன். என்ன வில்லங்கமோ?'' என்று ஊர் முழுதும் பேச்சு அடிபட்டது.

''புள்ள தங்கம்மா, மனவலாக்களும் கமறிக்கொண்டு போறனவையாம். கடலுக்க என்ன கொடுவினை நடக்குமோ தெரியாது'' என்று அடுத்தவீட்டுச் செல்லாச்சிப் பெத்தாச்சி ஈனித்துச் சொன்னதைக் கேட்ட தங்கம்மாவின் நெஞ்சு இடியேறு விழுந்ததுபோல் அதைத்தது.

'அலை எழும்புற கடல்தான் ஆளையும் விழுங்கும்' என்று நினைத்து நெஞ்சினுள் துணுக்குற்றாள்.

இரவு மண்டியது. பூமி சிதம்பிக் குளிரடித்தது.

இரவு பத்துமணி. தங்கம்மா விழித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது கொண்டல் பக்கமாக இடி முழக்கம் பூமி அதிர்ந்து கேட்டது. கச்சானுக்குள்ளே மேகம் சிலும்பி வெடித்து மின்னியது. ஒவ்வொரு கடி மின்னலுக்கும் அவள் நெஞ்சு ஒவ்வொரு ஏக்க மூச்சாய் கமறியது.

''விடிஞ்சு அதுகள் எப்ப கரை வந்து சேரும்? என்று தனக்குள் தவித்துக் கொண்டிருந்தாள்.

தங்கம்மாவின் கண்கள் கயர்க்கட்டின. நித்திரைக்கும் விழிப்பிற்குமிடையிலான குத்துவிழியில் உறங்கினாள். கோழித்தூக்கம்.

சற்றுவேளையால் கோடித்தெருவில் நாய்கள் அம்மாறு போட்டு ஊளையிட்டுக் கேட்டு, அவள் சட்டென விழித்தாள்.

'ஊருக்க கள்ளர் கிள்ளர் உலாவுறுங்களோ?'

என்றாலும், தொழிலுக்குப் போன ஊரவர்களையும் புருஷன் தம்பிமுத்து வையும் நினைத்தே பதைத்துக் கொண்டிருந்தாள்.

நாய்களின் குரைப்பு ஓயவில்லை.

'இப்ப அடிச்ச காத்துக்கு வளவுக்க ஏதேன் பனங்கங்குமட்டைகள் விழுந்திருக்கும், பொறுக்கியருவம்' என்று எழுந்து சென்றாள்.

அப்போது தெருப்படலையை யாரோ 'கடகட'த்துத் தட்டும் சத்தம் கேட்டதும் கால்கள் தரித்தன.

விளக்கை ஏந்திப்பிடித்தவண்ணம், கண்களைக் கூசிப் பார்த்து, ''உதாரு து?'' என்று நா வறட்டக் கேட்டபடி உற்றுப் பார்த்தாள்.

தம்பிமுத்து தலைப்பாகையை அவிழ்த்து உதறிக் கொண்டு 'விறுக்'கென்று உள்ளே வந்தான்.

திருக்கை அடித்தமாதிரி அவள் தேகம் குல்விட்டது.

''உதென்ன உந்தக்கோலம்?''

''சூ, சத்தம் போடாதை. மெதுவாய்ப்பேசு''

''ஏன், என்ன நடந்தது?''

நாங்கள் கடலுக்க வலை படுக்கமுந்தியே மனவல் குடா வலையைக் கடலடங்கப் பரப்பிப் போட்டான். எடுக்கச் சொல்லி ஊரவையெல்லாம் சேந்து கேட்டம். மறுத்திட்டுத் துவக்கை எடுத்து நீட்டினான். உடன பொடியள் துவக்கையும் பறிச்சு ஆளுக்கும் செப்பமாக அடிச்சுப் போட்டாங்கள்'',

''கடைசியா என்ன நடந்திருக்கு?''

''காயம் பட்டு விழுந்து போனான். ஆரோ பொலிசுக்கு ஓடினான். நாங்கள் சிமிக்கினுமல் துறைக்கு வந்திட்டம்''

கதை சொல்லிக் கொண்டிருக்கும் போதே காகங்கள் கரைந்தன. ஊர் விடிந்து கொண்டு வந்தது.

★

'மனவலின் மருமோன் அந்தோனி கொழும்பிலிருந்து வந்து விட்டான்' என்ற செய்தி அடுத்த நாள் ஊர் முழுதும் பரவிவிட்டது.

'என்ன வெள்ளீடி விழுத்த வந்திருக்கிறானோ?' என்று ஊர்ப்பெண்கள் பரதவித்துக்கொண்டார்கள். 'ஆனால், அந்தோனி எந்த வெள்ளிடியும் விழுத்த முடியாது.' என்று துரைராசாவுக்குத் தெரியும்.

ஊரவர்கள் சந்திக்குச் சந்திகூடி நின்று பயத்தில் இதே பேச்சைக் 'குசுகுசு'த்தது துரைராசாவுக்குக் 'கேந்தி'யாயிற்று.

தூரத்தே அந்தோனி செருமியபடி வந்துகொண்டிருந்ததைக் கவனித்த துரைராசா, ''உந்தச் செருமல் எப்பனும் பிடிக்கேல. ஆள் ஒரு மாதிரிச் 'செட்டு'க்காட்டிக்கொண்டு வாறார் போல கிடக்கு'' என்று சொல்லிய வண்ணம், வேலி ஓரமாக நிலத்தில் ஈர்க்கிலால் கீறிக் கொண்டிருந்தான்.

கூட்டத்தில் நின்ற லூயிஸ் கேட்டான்.

''தம்பி அந்தோனி கொழும்பால எப்ப வந்தனி?''

நக்கலாகச் சிரித்துக்கொண்டே, ''வந்தனி போனனி' யெண்டு எங்க தரவளியளைப் பாத்துச் சொல்றதுக்கு. நாங்களெல்லாம் குதிரைக்காரங்களில்லை''. என்றான் அந்தனி.

''நீ குதிரைக்காரனில்லை. சுரண்டிப் பிழைக்கிற ஒரு பிராணியின்ர அருமை மருமோனெண்டது எங்களுக்குத் தெரியும்.''

துரைராசா இப்படி மயறி அடித்த மாதிரித் தூக்கி எறிந்து பேசுவான் என்று அந்தோனி எதிர்பார்க்கவில்லை. அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. தும்பி மீன்போல் சிலும்பிக்கொண்டான்.

இந்த இடத்தில் 'சண்டித்தனம்' காட்டினால் மனவலின் கதிதான் தனக்கும் கிடைக்கும் என்ற பீதியால் கோபத்தை மறைத்துக்கொண்டு மெல்ல நழுவினான்.

ஒரு வாரமாகிவிட்டது. கடலுக்கு ஒரு மனுவும் போகவில்லை. துறைக் கொட்டிற்காவலுக்கு நின்ற மார்க்குக் கிழவனும் ஊரோடு வந்துவிட்டார். துறைமுகத்திலே கம்புதடிகள், கம்பாயங்கள், வள்ளங்கள் தேடுவாரற்றுக் கிடந்தன.



பொழுது குந்தி உறையில் விழு கிற நேரம் துரைராசா ஆத்துப்பறக்க ஓடிவந்தான்

''அப்பா நாளை தொடங்கி தொழிலாளியளிட்ட மனவல் பகுதி வரி எடுக்கப்போருங்களெண்டு கதையாக் கிடக்கு. நீ கேள்விப்பட்டியா?''

இதைக் கேட்ட சிமியோனப்பாவுக்கு கொண்ட லிடி முழக்கத்துடன் மேகம் பிளந்து கடல் குமுறியடிப்பது போல் நெஞ்சு கமாரிட்டது.

பொத்திக்கொண்டிருந்த வலையையும் நூலையும் அப்படியே கட்டி இறப்பில் செருகிவிட்டுத் தம்பிமுத்து வீட்டைத் தேடி நடந்தார்.

ஆனல் தம்பிமுத்து ஏலவே இந்தச் செய்தி அறிந்து சில ஆட்களோடு நடுக்குறிச்சிக்கு வந்து சேர்ந்து விட்டான்.

எல்லோரும் கடைசியாக அங்கே கூடி விட்டார்கள்.

''நாயம் பேச ஏலாமல் மனவல் கடைசியில பழி வேண்டத் துவங்கியிட்டான். இனி உயிர் போனலும் ஒரு கை பார்க்கிறதுதான்'' என்று கடலுறுமிபோல் கத்தினன் துரைராசா.

''ஆனவாகில வயித்துக்கே உழைக்காமல் சாகிறம். இதுக்குள்ள வரியாம் வரி. இனி ஆரைவரிஞ்சி போட்டுக் குடுக்கிறது? ''என்று கமறினன் தம்பிமுத்து.

சிலுவைராசா அண்ணர் சொன்ஞர்:

''செத்தாலும் வரி குடுக்கிறேல்லை, என்ன நடக்குதெண்டு பாப்பம்''

கூட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும் வரியை எதிர்த்து ஒரே குரலில் பேசுவதைக்கவனித்த சிமியோனப்பாவுக்குக் கடல் பொங்கியதுபோல் நெஞ்சினில் சந்தோஷம் புரைந்தது.

''இப்புடி உறிதியாகக் கடைசி வரை நிண்டால் கவுண் மேந்து ஏஜெண்டு வந்தாலும் எங்களை அசைக்க ஏலாது. உந்தப் புடியைக் கைவிடாதையுங்கோ''

''அது சரி, வரி எடுக்கிறது கவுண்மேந்துவாயிருக்கேக்க, நாங்கள் எப்பிடி வரியைக்குடுக்காமலிருக்கிறது?''

'யார் இப்படிக் கேட்டது?' என்று எல்லோரும் தலையை உயர்த்திப் பார்த்தார்கள்.

சூசை அண்ணரின் கூட்டாளி தம்பிப்பிள்ளை, ஆமை தலையைச் சுருக்கி இழுத்த மாதிரி மெதுவாகக் குறண்டிப் போயிருந்தான்.

''அது எங்களுக்குத் தெரியும். நாயத்தை எடுத்துக்காட்டுவம்''

''நாயத்தைக் கேக்காட்டி?''

''கேக்காட்டித் தொழிலாளர்கள் எல்லாருமாச் சேந்து வரி குடுக்காத இயக்கத்தை உண்டாக்கிப் போராடுவம்''.

''போராட வெளிக்கிட்டா, எக்கணம் கம்பிதான் எண்ண வேண்டி வரும்.''

''டேய் செத்தாலும் அநியாயத்தை எதிர்த்துப் போராடுறவன் தான்ரா மனுஷன்'' என்று ஆவேசமாகக் கறுமினன் துரைராசா.

இந்தக் கட்டத்தில் கூட்டத்திலே எல்லோரும் ஆரவாரித்துக் கைதட்டினதைக் கண்ட சிமியோனப்பா, ''துரைராசா சின்னப் பொடியனென்ருலும் அவன் சொல்றதுதான் சரி'' என்று உற்சாகப்படுத்திவிட்டு, தம்பிப்பிள்ளையைப் பார்த்து அமைதியாகக் கேட்டார்:

''தம்பிப்பிள்ளை, ஒரு பறிருலுக்கு இருவத்தைஞ்சு சதமாகக் குறைஞ்சது நூறு கூறுக்கு உன்ர நாயப்படி எவ்வளவு தேறும், சொல்லு?',

''இருவத்தஞ்சு ரூவாய்''

''அப்ப ஒரு மாதத்துக்கு?''

''எழு நூத்தியம்பது''

''ஒரு வருஷத்துக்கு?''

''அது பங்க பத்தாயிரத்துக்கு வரும்''

''பத்தாயிரம் இல்லை, ஒன்பதாயிரம் போல வரும்''

''அது சரி, இதில என்ன இருக்கு?''

''உதென்ன கேள்வி, குத்தகை எடுத்தது ஆரெண்டு தெரியுமே?''

''ஓம்''

''ஆர்''?

"மனவலண்ணன்தான்"

"இதையும் தெரிஞ்சுகொண்டே கதைச்சனி"

"ஏன் கதைச்சாலென்ன?"

"மனவல் ஆயிரம் ரூவாய்க்குத் தானே குத்தகை எடுத்தான். மிச்சம் ஆருக்கு அவனுக்குத்தானே?"

"ஏன், உங்களை எடுக்க வேண்டா மெண்டு ஆர் மறிச்சது?"

"தின்ன வழியில்லே, குத்தகை எடுக்க ஏலுமா?" என்று கேட்டார் அப்பா.

தம்பிப் பிள்ளையின் போக்குத் துரைராசாவுக்குத் துப்பரவாகப் பிடிக்கவில்லை.

"ணேய் அப்பா, இவன் மனவ லின்ர கையாள். இவனோட இனி என்ன பேச்சு?" என்று துள்ளிப் பாய்ந்தான் துரைராசா. பறிக்குள்ளி ருந்து வெளிக்கிட்ட கடுக்காய் நண்டு கள் போல் கூட்டத்தில் 'கலகல'ப்பு நிலவியது.

தம்பிப்பிள்ளை கூட்டத்தை விட்டு எழுந்து நடந்தான்.

அன்று ஊர் அடங்கலும் பரபரப் பாயிருந்தது. பெண்கள் நடமாட் டமும் அப்படித்தானிருந்தது.

செக்கல் பொழுதோடு அன்று இரவு ஊர் கூடித் தொழிலுக்குப் புறப்பட்டார்கள்.

பூமி விடிந்து கொண்டு வந்தது.

துறைமுகத்தை நோக்கி வள்ளங் கள் கடலைக் கிழித்து அம்மாறு போட்டுச் சீறிக்கொண்டு வருகின்றன தம்பிமுத்து தோணிக் கடையாலில் நின்று காக்கை தீவு முனங்குக்கு அணியத்தை இலக்குவைத்துக் கம்பைப் போட்டுத் தாங்கிக் கொண் டே கத்தினன்:

"வடு நீர் வாங்கி இழுக்குது. சவளை எடுத்து ஆளுக்கு ரண்டு கை வலிச்சுவிடுங்கோ"

உடனே வாரிப் பலகையிலிருந்த துரைராசாவும் லூர்த்தையாவும் அம் பாச் சொல்லி வலிக்கத் தொடங்கி விட்டார்கள்;

"கொண்டையிலே மழைகறுக்க—
மழை கறுக்க,
குமரி கொண்டை தள தளக்க—
தள தளக்க,
கச்சான் மழை வருகுதடா—
வருகுதடா,
மச்சான் ஊண்டிப் போடு
கம்பை—
போடு கம்பை,

சுருமீன் போல் 'சுர்' என்று 'சள சள'த்து இரைந்து வேகமாகப் பாய் கிறது, தோணி. துரைராசாவுக்கு 'குஷி' பிறந்துவிட்டது. ஆதலால், மடத்துக் கரைப் பூரணத்தை நினைத்து அம்பாவை இங்லீஷ் மெட்டில் வெளு த்து வாங்கினன்:

"இங்கிலீசு லேடி எடி —
லேடி எடி
வீடி கொண்டு வாடி பிளீஸ் —
வாடி பிளீஸ்
நீயும் நானும் கூடி ஒரு —
கூடி ஒரு,
'தம்' அடிப்போம் வாடி — கூடி
வாடி கூடி"

கூதற் கொடுகலின் விறைப்பு எடு பட்டுவிட்டது.

தம்பி முத்து வள்ளத்தைக் கரை யில் தட்டவிட்டு சவளை அடங்க வைத்தபின் சிமியோனப்பாவைப் பார்த்துச் சொன்னன்:

"அண்ணை துறைமுகத்தைக் கண் குடுத்துப்பார். இண்டைக்கு எச்சணம் ஏதண்டையிலதான் முடியும் போல கிடக்கு".

சிமியோனப்பா துறைமுகத்தை எகிறிப் பார்த்தார். அங்கே மனவ லும் மருமகன் அந்தோனியும் இரண்டு பொலிஸ்காரர்களுடன் எதையோ சுட்டிக்காட்டிப் பேசிக்கொண்டு நிற் பது தெரிகிறது.

"தம்பி மனவல் வரி எடுக்கப் பொலிசோட வந்திருக்கிருன்போல தெரியுது. கலவரப்படாதையுங்கோ"

துறைமுகத் தரையில் இருல் பறிக் கூறுகள் வந்து நிறைந்து விட் டன.

துரைரராசா இன்னேசப் பெத் தாச்சியின் கடகத்தில் கொட்டிய ஒரு இருல், விலைகூறுதலில் நின்றது.

இன்னேசப் பெத்தாச்சியும் சலோ மை ஆச்சியும் இருல் கூறுகளை விலை கூறுவதும், இருலில் விழுகின்ற மணி இலையான்களை இறகால் கலைப்ப துமாக இருப்பதைப் பொலிஸ்காரர்

கள் 'விடுப்பு'ப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

சங்கானைச் சின்னாச்சி ஒரு கூறு இறாலுக்களோ விலைக்குக்கேட்டபோது சலோமையாச்சிக்குக் 'கோளவம்' பற்றிக்கொண்டு வந்துவிட்டது.

வெற்றிலைக் குதம்பல் வாயைப் 'பொழி'ச்சிட்டுத் தடுக்கை நீக்கித் துப்பிவிட்டு முத்துக் கொறித்துக் கொண்டு சொன்னா:

''எடிய நாச்சியாரே, தானம் பூமாதிரிப் பளபளக்கிற றாலை இந்தக் கொடிய விலை கேக்க மனம் வந்துதே. அதுகள் ரா முழுதும் தோஞ்சு விறைச்சுக் காகக் குஞ்சுகளாட்டம் கொடுக்கிக் கொண்டு நிக்குதுகள். நீர் இப்புடி எடுத்துக் கொண்டு போய் மனுஷனுக்கு நல்ல 'உரிசை'யாய்க் காச்சிக் குடுக்க எண்ணமாக்கும்.''

''ஆக விண்ணாணம் சொத்தாமல் தாறெண்டாத்தா, அல்லாட்டி உன்ர சாமானை உன்னோடைவைச்சிரு''

''இதில நிண்டு கொழுத்தாடு பிடியாமல் நீர் போம். என்ர சாமான் என்னோடை கிடக்கட்டு'' என்று கேலியாகச் சொல்லிவிட்டு, சலோமையாச்சி சின்னாச்சி கேட்ட விலையைத் தொட்டுக் கூறினா:

''தார் அஞ்சு ரூவாயாம்?''

''இந்தா அஞ்சரை விடு, றாலை''

கொட்டடிச் சின்னப்பிள்ளை கேட்ட விலையோடு கடகத்தில் கை போட்டாள்.

''தார் அஞ்சரையாம்?''

''ஆறு தாறன் விடு''

நாவாந்துறைப் பொன்னம்மா வைத்த விலைக்குத்தான் சம்மதம் வருகிறது.

''சரி காசை எடு''

நாவாந்துறைப் பொன்னம்மா இறால் கடகத்தைத் தூக்க முன்பே, 'கிள்ளுறால்' என்று ஒரு கையும், 'அள்ளுறால்' என்று மறு கையுமாக இரண்டு கைகள் 'கொள்ளுறால்' எடுத்துக்கொண்டன.

மூன்றாவது கையாக மனவலின் கை நீண்டது.

சலோமை ஆச்சிக்கு விஷயம் புரிந்து விட்டது. 'கடுகடு'த்தவாறே கேட்டா:

''என்னவும் உமக்கு வேணும்?''

''வரி''

மனவல் சிரித்தார்

இதை கவனித்த துரைராசா குழுமூரல் மாதிரிச் சீறிக்கொண்டு சொன்னான்:

''இஞ்ச உமக்கு வரியுமில்லை, கிரியுமில்லை'' துரைராசாவின் ஆவேசத்தைக் கண்ட சனம் ஆரவாரித்துக் கொண்டு கும்பலாகக் கூடி விட்டது.

உடனே மனவல் கூட்டத்தை விட்டு மெதுவாக நழுவிக் கொண்டார்.

''தம்பிமாரே, களபுளப்படாதையுங்க. மனவல் போயிட்டான்.'' என்று எடுத்துச் சொன்னான் தம்பி முத்து.

''போகாட்டி, போகவைப்போம்'' என்றான் துரைராசா.

சற்றுத்தூரத்தில் மனவல் பொலிஸ்காரர்களுடன் துறைமுகத்தைச் சுட்டிக்காட்டிப் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. சிமியோனப்பா பொடியங்களுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

''சிமியோனண்ணை, பொலிஸ்காரங்கள் வாறாங்கள். கதையை நிற்பாட்டு'' என்று தம்பிமுத்து சொல்லும் போதே பொலிஸ்காரர்கள் கும்பலுக்குக் கிட்ட நெருங்கி விட்டார்கள்.

ஒரு பொலிஸ்காரன் கேட்டான்:

''தார் இந்தச் சிமியோன்?''

''ஏன், அது நான்தான்''

''தம்பிமுத்து?''

''அது நான்!''

'ஒண்டபேர் துரைராசா, என்ன?'

''ஓம்!''

''ஒண்ட பேர்?''

''சிலுவைராசா''

''நாலுபேரும் பின்னேரம் பொலிசுக்கு வாருங்கோ''

ஒருவரும் வாய் திறந்து பேசவில்லை. ஆளையாள் முழிசிக் கொண்டு நின்றார்கள்.

"தம்பிமுத்து, நாங்கள் என்ன ஆரையேன் 'மேடர்' செய்து போட்டமோ பொலிசுக்கு வரமாட்டமெண்டு ஒரு சாவாச் சொல்றதுக்குப் பேந்தேன் நிண்டு முழுசிறியள்?"

வெட்டொன்று துண்டு ரண்டாகச் சொன்ன வரப்பிரகாசம் அப்பா, பொடுகு போல இருந்தாலும் அவர் மீசை அப்போது காற்றில் 'படபடத்'து ஆடியது.

"டேய் பண்டி, பிளடி ருஸ்கல்" என்று உறுக்கினான் பொலிஸ்.

"அலோ மிஸ்டர் பொலிஸ், இதில நிக்கிற நாங்கள் ஆரும் வரி குடுக்கமாட்டம். வேணுமெண்டா எல்லாற்றை பேரையும் எழுதிக் கொண்டு போய் வழக்கை வையும். கோட்டில பாத்துக் கொள்ளுவம்" என்றான் ஹோல்டிங் சிவலை ரத்தினம்.

பொலிஸ் எல்லோர் பெயரையும் பதிவு செய்து கொண்டு போய்விட்டது.

அன்று, 'வழக்குச் செலவுக்காகப் பொது இழுப்பு வைப்பது' என்று ஊர் கூடி முடிவெடுத்தது.

ஆனால், அடுத்த வாரம் இந்த ஊர் முழுதும் ஒரு செய்தி அடிபடத் தொடங்கியது:

'வழக்கு வைச்சு ஆக்களை மறியலுக்கு அனுப்பினால், கட்டின குத்தகைக் காசுகையில கடிக்குமெண்டு மனவல் வழக்கை விட்டிட்டான்.'

"சாச்சா இதுக்குள்ள ஏதோ சூழ்ச்சி இருக்கு" என்று அடித்துச் சொன்னான் சிலுவைராசா.

அப்போது 'கூய்' என்று ஒரு குரல் கேட்டது.

தம்பிமுத்து வேலிக்கடப்படியில் நின்று பார்த்தான். ஆசீர்வாதம், சந்தியோ, லூயிஸ் மூன்று பேரும் நிற்பது தெரிந்தது.

"சீர் வம்பு ஒரு மாதிரி வெளிச்சிருக்கு. செக்கல் வடுப்பேந்த நீருக்கு மடத்துக்கரையால வலைகட்டிப் பிடிச்சுப்பாப்பம் எப்பன் வேளையோட வாருங்கோ' என்றான் ஆசீர்வாதம்.

# டோல்ஃபின் உதவி செய்கிறது

விண்வெளியை மனிதன் வென்று கொண்டபோதிலும் ஆழ்கடலின் பல மர்மங்களைக் கண்டு பிடிப்பது முடியாத காரியமாக இருக்கிறது.

ஆழ்கடலின் எல்லாப் பகுதிக்கும் சென்று வர முடியாத மனிதனுக்கு டால்ஃபின் உதவி செய்கிறது. ஒரு குழுவான டால்ஃபின்கள், சீல், மீன்களுக்கெல்லாம் தலைவனாக இருந்து வரும் டால்ஃபின் ஒன்றை அமெரிக்கக் கடற்படையினர் ஆழ்கடலின் மர்மங்களை அறிவதற்குப் பழக்கியிருக்கின்றனர்.

ஆழ்கடலில் விபத்துக்குள்ளாகும் நீர் மூழ்கிக் கப்பல்களைப் பற்றிய தகவல்கள் இதன் மூலமாகத் தெரிவருகின்றன.

இதைப் போன்று விபத்துக்குள்ளாகும் நீச்சல் வீரர்களையும் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறது.

இன்று இதுபோன்ற பல டால்ஃபின்கள் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றன.



தமது கடமையைச் சரியாகச் செய்யும் இவ் விசித்திரப் பிராணிகளுக்குப் பரிசாக ஒவ்வொரு ருசி மிக்க மீன் துண்டு கிடைக்கிறதாம்.

''என்ன தங்கம்மாக்கா இண்டைக்கு வலு உசாராயிருக்கினம்?'' என்று பொன்னரியம் தனது புருஷன் சந்தியோவைப் பார்த்து வாயடங்கச் சிரித்தாள். சந்தியோவும் ஆசையோடு சிரித்தான். சிரிப்பில் துன்னிய சொக்கை, அறுத்த ஆமைச்சதை போல் துடித்தது.

தம்பிமுத்து வலைபறியைத் தோளில் வைத்துக்கொண்டு கிளம்பிவிட்டான்.

தங்கம்மா அவன் பின்னே தெருப் படலை வரை போய் நின்று, புருஷன் வீதியில் மறையும் வரை இமை கொட்டாமல் பார்த்தபடியே நின்றாள்.

காக்கைதீவுச் சுடலையைத் தாண்டி வயல் எல்லை ஓரமாக எல்லோரும் சுடற் துறைமுகத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

சோளகக் காற்றுப் 'புசு புசு'த்து வீசிக்கொண்டிருந்தது.

தூரத்துப் பார்வையிலே துறைமுகத்தில் ஒரு மண்டு புகை கிளம்பிக் காற்றுச் சாய்வாக முகில் விட்டுப் போய்க்கொண்டிருப்பதைக் கவனித்த தம்பிமுத்து, ''எட்டிவாருங்கோ, துறைக் கொட்டியில புகை மூடம் தெரியுது'' என்று உரத்துக் கத்தினான்.

கெண்டைக் கால்கள் உதறி எடுத்த தாவு ஓட்டம் துறைமுகத்தில் தான் தரித்தது.

ஏற்கனவே போன சிமியோனப்பா துறைமுக வீதியில் அந்தரப்பட்டு ஓடிக் கொண்டிருந்தார்.

அதைக் கண்ட தம்பிமுத்து குரல் கேரக் கத்தினான்.

'டேய் பொடியள், சிமியோனண்ணன் மேற்கே சோளகத்தைத் தேடி ஓடுகிறார். சுணங்காமல் அங்க முன்னு ஓடுங்கோ''

அவர்கள் அள்ளுப்பட்டுக் கொண்டு ஓரே ஓட்டமாக ஓடினார்கள்.

''அடைக்கல மாதாவே, துறைக் கொட்டில் எரியுதடா!''

தம்பிமுத்து குழறிக்கொண்டு வலைபறியை இறக்கி வைத்து விட்டுக் குடல் தெறிக்க ஓடினான்.

சோளகக் காற்றுச் சீறியடித்தது; கடல் அலைகள் குமுறிக் கெம்பின.

துறைக் கொட்டில் விளாசி எரிந்து கொண்டிருந்தது.

அப்போது துரைராசா நெஞ்சு விம்மிக் கொண்டு கத்தினான்:

''அங்க பாருங்கோ, தம்பிப்பிள்ளை நெருப்பு வைச்சுப் போட்டு வயலுக் கால விழுந்து ஓடுறான். அவனைப் புடியுங்கோ''

சிமியோனப்பா கேருந் தொனியில் சொன்ன பதில் உடைப்பெடுத்த ஆறுபோல் கமாரிட்டது.

''மக்காள், அஞ்சாதையுங்கோ. அவன் இந்த நெருப்பைக் கொட்டிலுக்கு வைக்கேல, இந்த ஊர் ஏழைச் சனத்தின்ர நெஞ்சில வைச்சிட்டு ஓடுறான். இனி நீங்கள் பதற வேண்டாம். சுரண்டினவனை அழிக்க ஆயத்தம் செய்ய வேணும்''

தம்பிமுத்து கண் எறிந்து கடலைப் பார்த்தான்.

ஓலங்களாகப் பிளக்கப்பட்ட வள்ளங்கள், கடற் சாதாளையோடு சங்கமித்துக் கரையில் ஒதுங்குண்டு கிடந்தன. உடனே கடலைத் தாவி ஓடினான்.

கால்களை அடி எடுத்து வைத்த போது அவன் குதிக்காலில் ஏதோ 'நறுக்' கிட்டது. கணவாய் போல் சொண்டுகளைக் கோணி, சடலத்தைக் கூனிக் காலைத்தூக்கிப் பார்த்தான்.

குதிக்காலில் வீதுறு ஓடு குத்திட்டு நின்று இரத்தப் பெருக்கு எடுத்தது.

''சிமியோனண்ணை, மனவல் கடலுக்கை போதில் ஓடுகளையும் போட்டிருக்கிறான்டாண்ணே'' என்று வெம்பிக் குரல் வைத்துக்கொண்டே, அந்த வீதுறு ஓட்டை இடுங்கி எடுத்தான்

இரத்தம் 'குபீரி'ட்டுச் சீறியது.

''அண்ணே, இந்த ரத்தம் சாட்சியாச் சொல்றன்: எங்களுக்கு இந்த மாதிரி அட்டூழியஞ் செய்தவனை இனிக் கடைசிவரை விட்டு வைக்கக் கூடாது''


சிமியோனப்பா தம்பி முத்துவின் முதுகில் தட்டினார்.

தம்பிமுத்து நீ சொன்னது கட்டாயம் நடக்கத்தான் போகுது. தொழிலாளியருக்க இருந்து சூழ்ச்சி செய்தவனும்போயிட்டான் கடைசியில நாங்கள் வெற்றிக்கொடி நாட்டுறது நிச்சயம்!

அப்போது கடல் கொந்தளித்துச் சீறியது. அலைகள் அம்மாறு போட்டுக் குமுறியடித்துக்கொண்டிருந்தன.

தொழிலாளர்களின் அந்த நெஞ்சுகளும் குமுறிக்கொண்டேயிருந்தன.

# நானோர் தேசத்துரோகி அல்லன்!



குப்பிழான் ஐ. சண்முகன்

நேரம் நள்ளிரவு பன்னிரண்டு மணியாகியும், இன்னும் அவர்களைக் காணவில்லை. கடற்கரையோரப் புதர்களுக்கு மத்தியில் கருங்கல்லில் நான் குந்தியிருக்கிறேன். மங்கிய நிலவு வெளிச்சத்தில் நீலக்கடலலைகள் வெள்ளை வெல்வெட் துணிகளாகப் பளிச்சிடுகின்றன. தூரத்தில் காலிவீதியில் ஏதோ வாகனம் உறுமிக்கொண்டே விரையும் சத்தம் கேட்கின்றது. ஸ்டேசனில் நிற்காமல் ஏதோவொரு சாமான் வண்டி ஓடுகின்றது. ஆழ்ந்த இரவின் மௌனத்தில் இனம் புரியாத ஒலிகள் புதரில் கேட்டுக்கொண்டிருந்தன. ஒளிப் புள்ளிகளாய், நாலைந்து மீன்பிடி வள்ளங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிந்தன.

அவைகளிலொன்று நான் எதிர்பார்த்துக் காத்திருக்கும் வள்ளமாகவும் இருக்கலாம். முன்னேற்பாட்டின்படி துறைமுகத்திற்கு வெளியே நிற்கும் கப்பலிலிருந்து, வள்ளத்தின் மூலம் அவர்கள் நானிருக்குமிடத்தை அடைவார்கள். அவர்கள் வள்ளத்தின் அடையாளமாகப் பச்சை ஒளிப்புள்ளி தெரியும்.

அவைகளிலெதுவும் நானெதிர்பார்த்திருக்கும் வள்ளமல்ல.

நான் கனவுகளில் மிதக்கிறேன். அவர்கள் வள்ளம் வந்ததும்—என் கைகளில் கனமாய்க் கனக்கும், எங்கள் நாட்டு இரகசியங்கள் அடங்கிய பார்சலை அவர்கள் கையில் கொடுத்ததும்—என் கைகளில் இருபத்தையாயிரம் ரூபாய்—கால் இலட்சம். இவ்வளவு காலமும் நான் பட்ட இன்னல்கள்-என் குடும்பத்தினர் பட்ட கஷ்டங்கள் எல்லாவற்றிற்கும் விடிவு; விடிவு; விடிவு.

இந்த இரகசியங்களைச் சேர்க்க நான் எவ்வளவு பாடுபட்டிருப்பேனென உங்களுக்குத் தெரியாது எத்தனையோ கனவுகளைச் சுமந்து பட்டப் படிப்புப் படித்து வெளியேறியதும் என்னை என் குடும்பத்தைப் பற்றிய—என் எதிர்கால வாழ்வு பற்றிய, கனவுகள் சிதைய வருடக்கணக்காக வேலையில்லாமல் அலைந்து திரிந்ததும், சிலகாலத்தின் பின் சிலரின் தொடர்பால் இந்த வேலை எனக்குக் கிடைத்ததும்............

இந்த வேலையைப் பூரணப்படுத்த எனக்கு ஆறு மாதங்கள் சென்றன. இதற்காக நான் எத்தனையோ இடங்களில், எத்தனையோ வேஷங்களுடன் அலைந்திருக்கிறேன்; எத்தனையோ மாய்மாலம் பண்ணியிருக்கிறேன்; எத்தனையோ ஆபத்துகளிலிருந்து தப்பியிருக்கிறேன். எங்கள் நாட்டின் பாதுகாப்புப் பலவீனங்கள் பற்றிய எத்தனையோ குறிப்புக்களும், முக்கிய கேந்திர ஸ்தானங்களைப்பற்றிய எத்தனையோ அரிய படங்களும் இப்போது என் கைகளிலுண்டு. இன்னும் சிறிது நேரத்தில் அவற்றின் பரிமாற்றத்தில் — என் கைகளில் இருபத்தையாயிரம் ரூபாய். எனது சோகங்கள் நிறைந்த வாழ்வில் திருப்புமையமாக அமையப் போகின்ற இருபத்தையாயிரம் ரூபாய்.

இன்னமும் பச்சை சமிக்கையைக் காணவில்லையே?

நான் எதிர்கால வாழ்வு பற்றிய இன்பக் கற்பனைகளில் ஆழ்ந்திருக்கிறேன். மகாவலிகங்கையோரமும், பேராதனைப் பூந்தோட்டமும், பனிமூடிய மலைச் சிகரங்களும் நினைவரங்கில் மின்னுகின்றன. அங்கெல்லாம் அவளுடன் சுற்றிய நாட்கள்.........;

இனியென்ன அவளுடன்தான் வாழப் போகின்றேனே.

பொத்தென்று ஏதோ சத்தம் கேட்கின்றது. திடுக்கிட்டேன்; பார்சலே என் வாழ்வில் விடிவை ஏற்படுத்தப் போகின்ற பார்சலே, என்னை யறியாமலேயே மார்புடன் அணைத்துக் கொள்கிறேன். தேங்காயொன்று என்னருகில் உருண்டு வந்து கிடக்கின்றது. மேலே நிமிர்ந்து பார்க்கின்றேன். தென்னோலைகள் நிலவொளியில் மின்னுகின்றன. நீலக்கடலலைகள் தமது நித்திய ஓங்காரத்துடன் கரையில் மோதுகின்றன.

நான் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றேன்.

பச்சைச் சமிக்ஞையை இன்னும் காணவில்லை.

இன்னமும் காணவில்லையே என்று என் மனதில் தவிப்பு........., பாடுபட்டதின் பலனை அடைய அவ்வளவு அவசரம். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எது வித சலனமும் இல்லை.

என் காதுகளில் கலீர் கலீர் சலங்கையொலி கேட்கிறது. முன்னிரவில் பார்த்த நாட்டியத்தின் காட்சிகள் மனதில் திரையிடுகின்றன. மஞ்சள் —பச்சை — சிகப்பு—நீல வெளிச்சத்தின் பின்னணியில் அவள் ஒயிலாக ஆடுகின்றாள்; அங்கம் குலுங்க, நீண்ட கரும்பாம்பாய் பின்னல் வளைந்து வர, முகமும் கண்களும் ஆயிரம் செய்திகளைச் சொல்ல, காலைத்தூக்கி, கையில் அபிநய முத்திரை காட்டி சுற்றிச் சுழன்று.........

அப்பப்பா! என்ன இலாவகம்; என்ன அழகு. சங்கீதமும் நாட்டியமும் ஓர் உலக அதிசயம் என்று ஒரு கிறுக்கன் சொன்னான். அதில்தான் எவ்வளவு உண்மை.

அவர்கள் வரமாட்டார்களா? மணிக்கூட்டைத் தூக்கிப் பார்க்கின்றேன். மங்கிய நிலவு வெளிச்சத்தில் நேரம் ஒன்றரையை அணுகுவது போலத் தெரிகின்றது. ஏதோ நடக்கப் போவது போன்று இதயத்தில் ஏதோ குறுகுறுப்பு;

அந்தத் தவிப்பை மறப்பதற்காகமுன்னிரவு நாட்டியத்தில் மனதைத் திருப்புகின்றேன்.



இனிய கீத அலைகளாய் அந்தப் பாடல்—அவள் இறுதியாக அபிநயம் பிடித்த மகாகவி பாரதியாரின் அந்தப் பாடல் மனதில் ஒலிக்கிறது.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே
அதன்—முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே இதை வந்தனை கூறி மனத்தில் இருத்தியென் வாயார வாழ்த்தேனோ — இதை வந்தே மாதரம் வந்தே மாதரம் என்று வணங்கேனோ?''

திரும்பத் திரும்ப இந்த பாடலை அதே இராகக் குழைவுகளுடன் பாட வேண்டும் போல ஒரு உணர்ச்சி. என்னை மறந்த நிலையில் வாயை அசைத்து மெல்லிய குரலில் அதைப் பாடுகின்றேன். இராக ஏற்ற, இறக்கக் குழைவுகளுடன் பாடுகின்றேன்.

பிரமை மயக்கம்.

என் முன் அவள் நின்று ஆடுகின்றாள். நான் செய்யப்போகின்ற காரியத்தை, அதனால் நான் என் நாட்டுக்குச் செய்யப்போகும் துரோகத்தை, அதனால் ஏற்படப் போகும் விளைவுகளைக் காட்டி என்னை எச்சரிப்பவள் போல ஆடுகின்றாள்.

நான் படித்தவனா என்று கேட்பவள் போல ஆடுகின்றாள்;

உனக்கு உன் பாரம்பரியப் பெருமைகள் தெரியப் போகின்றதா என்று கேட்பவள் போல ஆடுகின்றாள்;


உனக்கு நாட்டுப் பற்று உண்டா என்று கேட்டு ஏளனச் சிரிப்புச் சிரிப்பவள் போல ஆடுகின்றாள்;

மங்கிய நிலவொளி என் முன்னால் பரந்து கிடக்கிறது; இனிமையாய் மெல்லிய காற்று ஊருகின்றது. என் வீட்டுக்கருகில் வளர்ந்து நிற்கும் அந்தப் பெரிய பழைய இலுப்பை மரமும், அதன் கீழ் திட்டு திட்டாய் விழுந்திருக்கும் நிலவொளியும்...... எனது தந்தை தாயாரின் இளமைப் பருவங்களும்...ஏதோவோர் உருவொளித் தோற்றமாய் என் மனக்கண்ணில் தெரிகின்றன.

அந்தப் பாடல் வரிகள் மீண்டும் ஒலிப்பதுபோல...

அவள் சுழன்று சுழன்று ஆடுவது போல......

''வந்தே மாதரம் வந்தே மாதரம் என்று வணங்கேனோ?''



தூரத்தில் பச்சைச் சமிக்ஞை தெரிகின்றது.

எனது கையிலிருக்கும் பார்சல் ஏன் இவ்வளவு கனமாகக் கனக்க வேண்டும்?

என்னுள் ஒரு வெறி, என் கைகளில் ஒரு நடுக்கம் நான் தேசத் துரோகியா? ஆரவாரிக்கும் கடல் ''ஓம்; ஓம்'' என்று கத்துகிறது.

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

கடலை நோக்கி எறிகிறேன்; என்னைத் தேசத் துரோகி என்று சொன்ன கடலை நோக்கி எறிகின்றேன். அந்தப் பார்சலைக் கடலில் எறிந்து விட்டேன். இருபத்தையாயிரம் ரூபாயை எனது—குடும்பத்தினரின் கஷ்டங்கள் சோகங்களைத் தீர்க்க வந்த வரப்பிரசாதத்தை நான் கடலில் எறிந்து விட்டேன்.

நான் தேசியப்பற்றுக் கொண்டவன்; தேசத்துரோகியல்ல.

கடலலைகள் அமைதியாகக் கரையை நோக்கி வந்துகொண்டிருந்தன. காற்று இதமாக ஊதியது. தென்னோலைகள் நிலவொளியில் பளபளத்தன.

பச்சை வெளிச்சமும் கரையை அண்மிக்கொண்டிருந்தது.

நான் எழும்பி நடக்கிறேன். ''எந்தையும்...தாயும்......'' என்ற பாடலை முணுமுணுத்தவாறு நடக்கின்றேன். என் மனதில் வெறியில்லை; வேலையில்லையே என்ற ஆதங்கம் இல்லை; இருபத்தையாயிரம் ரூபாயை இழந்து விட்டேனே என்ற கழிவிரக்கமில்லை.

நான் 'தேசத் துரோகி' யாகாமல் காப்பாற்றப்பட்டுவிட்டேன்.

முன்இரவில் நடமாடிய அந்த மங்கை என்னை காப்பாற்றிய தெய்வமாக என் மனதில் பிரகாசிக்கிறாள். அந்தத் தெய்வத்தை நினைத்துப் பிரதிக்ஞை செய்கின்றேன். ''எனக்கு என் குடும்பத்தினருக்கு எத்தனை எத்தனை இடர்கள் வந்தாலும்—நான் பட்டினிகிடந்து செத்தாலும் என் எதிர்காலக்கனவுகள் சிதைந்தாலும் – என் வாழ்க்கை வளம் காணாமலே அழிந்துபட்டாலும், நான் என் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் தேசத் துரோகச் செயலைச் செய்யமாட்டேன். என் முன்னையோரின் காவிய வாழ்க்கை நிகழ்ந்த இந்தப் புண்ணியபூமியை நான் களங்கப்படுத்த மாட்டேன்; என் நாட்டுச் சுதந்திரத்துக்காகப் போராடிய பவித்திரமான ஆத்மாக்களுக்குத் துயரத்தைத் தேடித்தரமாட்டேன். இது சத்தியம். முக்காலும் சத்தியம்.''

எனது பிரதிக்ஞைக்குச் சான்று கூறுவதுபோலக் கடலின் இரைச்சல் அண்மையில் கேட்கின்றது. குளிர் காற்று ஊ ஊ என்று காதில் இரைந்து செல்லுகின்றது. பக்கத்து வீட்டுப் பண்ணையிலிருந்த கோழியொன்று சிறகடித்துக் கூவுகின்றது.

நான் நடக்கிறேன். எல்லையில்லாத நிம்மதியை, அமைதியை, ஏன் ஒரு பெருமையை மனதில் தாங்கியவனாய் நடக்கிறேன்.

'வந்தே மாதரம்' என் காதில் ஒலிக்கின்றது.

பச்சையொளி கரையை அடைய இன்னும் சில நிமிடங்கள் செல்லலாம்.

அப்போது நான் அவர்களை வரவேற்கமாட்டேன். சில போலீஸ்காரர்கள் அவர்களை வரவேற்பார்களென்று நினைக்கின்றேன்.

அவர்கள் பாவம்தான்; நான் அவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டேன்தான்! ஆனால், அதற்கு நானென்ன செய்யமுடியும்!

நான் தேசத் துரோகியல்ல!



# இருபத்தெட்டு!

சீ. சரத்தனார்

இருபத்தெட்டு இருபத்தெட்டிருபத்தெட்டாம்,
இற்றை வரை சூடுபட்டோர் இருபத்தெட்டாம்!

மலையகத்து மண்ணினிலே பசுமை கண்டோர்,
மாண்புமிகு தொழிலாளர் சூடுண்டாராம்!
கடுங்குளிரும், பல துயரும் கவ்வும் போதும்
களையாத தொழிலாளர் சூடுண்டாராம்!
இழப்பதற்கு ஒன்றுமில்லார், இந்த நாட்டின்
இதயங்கள் சூடுபட்டார் இருபத்தெட்டு!

யார் இவரைச் சுட்டார்கள்,
ஏனோ கொன்றார்?
யார் துவக்கால் இவர் வீழ்ந்தார்,
ஏனோ மாய்ந்தார்?

ராமசாமி, பார்வதியின் பச்சைரத்தம்,
ஆறுமுகம், கந்தையா இளையதேகம்,
யாதுக்காய் இவரெல்லாம் சூடுபட்டார்?
யாதுக்காய்? யாதுக்காய்? யாதுக்காக?
தொழிலாளர் ரத்தமது கழுநீரல்ல.
தொழிலாளர் உயிர்களது துரும்புமல்ல.
தொழிலாளர் தேசத்தின் செல்வமாவார்;
தொழிலாளர் கரங்களவை துவக்கும் ஏந்தும்!

# 2

"வெள்ளையர்கள் வந்தார்கள் வெதும்பிச் செத்தோம்,
விடுதலையாமென்றவுடன் வீறு பெற்றோம்!
வெள்ளையர்கள் இருந்த இடம் கறுப்பர் வந்தார்,
வெடித்துவக்கை எங்கள் பக்கம் நீட்டி வைத்தார்!

இருபத்தெட்டு இருபத்தெட்டிருபத்தெட்டாம்,
இற்றைவரை சுடுபட்டோர் இருபத்தெட்டாம்!

அன்றுமுதல் இன்றுவரை ஒரேகதைதான்.
ஆட்சிமுறை மாற்றமுற்றும் அதே கதைதான்
என்றுமுதல் எங்கள் கதை தொடங்கப்போமோ?
எங்கள் கதை இன்பக்கதை ஆகப்போமோ?

னேக்கலையங்கே துவக்காற் சுட்டார்;
ழோன முறையினிலே அடக்கஞ் செய்தார்!
ஈனமான செய்கை இது, இழிந்தசெய்கை,
இதற்கெல்லாம் பதில் சொல்ல நாளுமுண்டு!

முப்பத்தொரு வருஷங்கள் இருபத்தெண்மர்,
மூக்கினையும் காதினையும் இழந்தோர் பன்மர்!
தப்பி உயிர் வாழ்கின்றோர் லட்சமானோர்,
தடியடியால் உடல்நொந்தோர் ஆயிரமானோர்!

இவைக்கெல்லாம் கணக்குமுண்டு, பதிலுமுண்டு,
இடர்க்கெல்லாம் விடிவுமுண்டு, முடிவுமுண்டு!
கவைக்குதவா மொழிகளெல்லாம் எமக்கு வேண்டாம்,
கலகலத்துத் தலைநிமிர்ந்த வாழ்வே வேண்டும்!"

# 3

இந்த நாட்டின் இரத்தமது தொழிலாளர்கள்;
இணையற்ற வரலாற்றின் தொழிலாளர்கள்!
சொந்த விதி தங்கள் கையில் எடுக்கப்போறார்!
நொந்த விதி தன்னை அவர் மாற்றப்போறார்!

தேயிலையின் தூருக்குள் மடிந்த வாழ்வு,
தேசத்தின் எழுச்சிக்காய் ஆகும் வாழ்வு,
பேரலையின் தோற்றமதாய் சீறும் வாழ்வு,
பெரியதொரு வரலாற்றை ஆக்கும் வாழ்வு!

வரலாற்றின் விதியதுவே மாறிப்போகும்,
வல்லவர்கள் அவர்களது கைகளசைவில்!
தருவார்கள் தாம் பெற்ற எல்லாம் மீண்டும்,
தரணியதில் நடந்த கதை இதுவேயாகும்!

---

குறிப்பு:
(1939-ம் ஆண்டிலிருந்து இதுவரை 28 மலைநாட்டுத் தொழிலாளர்கள் ஆட்சியாளரது துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகியிருக்கிறார்கள். நாவலந்தையில் அண்மையில் ஆறுமுகம் (26 வயது) கந்தையா (24 வயது) பார்வதி (18 வயது) ராமசாமி (9 வயது) ஆகியோர் குண்டுபட்டு மாண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை முன் வைத்து இலங்கை வரலாற்றிலேயே முதன் முறையாக எல்லாத்தோட்டத் தொழிற்சங்கங்களும் ஒன்று கூடிக் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.)

வத்தளையிலிருந்து புத்தளம் வரை

# பேச்சு மொழி

அ. வி. மயில்வாகனம்

வத்தளையிலிருந்து புத்தளம் வரையும் 27 ஆண்டுகளுக்கு முன் வித்தியாதரிசியாகக் கடமையாற்றிய பொழுது பொதுமக்களிடையே வழங்கிவரும் பேச்சுத் தமிழினைச் சிறிது சுவைத்துக் கொண்டோம். பின்னர், தென்னமரவடி, பள்ளித்திடல், முத்துக்கல், கொறப்பொலே, பாணமை போன்ற இடங்களிலும் உள்ள பேச்சு வழக்கினைக் கேட்டு உணர்ந்து பழந் தமிழ்ச் சொற்கூட்டும் வசன அமைப்பும் பிறமொழிச் சொற்புகலும் எப்படி நிகழ்ந்தன வென ஆராய்ந்தோம். சில உதாரணங்களையும் அவை வழங்குமிடங்களையும் தருவோம்:-

மீன் வித்தனில் போகிறது.
(உடப்பு)

பூமுடிவு, இந்தஇலே பிஞ்சு.
(சிலாபம்)

வெட்டைக்கிறங்கிப்போனேன்.
வழியில் சைக்கிளை நித்தாட்டினேன். (தென்ன மரவடி)

இதென்ன கறதரையாயிருக்கு.
(கோளாவில்)

கோணிச்சாக்கு இருக்கி
(பாணமை)

என்னகா? இருகா?
(காத்தான்குடி)

நீர் வரவும், இதிலே இருக்கவும்.
(படுவான்கரை)

எல்லாரும் வந்தா? அவங்க போயா? (போளவத்தை)

நுப்பே சேம் வேணும்.
(பள்ளித்திடல்)

கையில் நோகப்படும். (புத்தளம்)

அப்பூந்தை சாப்பாடு (கற்பிட்டி)

அடிக்கியா வந்தே?
(அட்டப்பள்ளம்)

புளியடியில் வைத்துச் சொன்னேன். (வத்தளை)

தென்னந் தோப்புக்கள் நிறைந்து இயற்கையன்னையின் எழிலுறு வனப்புக்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற கரையோரக் குடிமனைகளிலே தமக்கென வாழாப் பழங்குடி மக்கள் தம் அன்றாட உழைப்புடன் போது மென்ற மனத்தினராய் இப்பகுதிகளில் வாழ்வர். இரண்டு பனையடி, தொடுவாவை போன்ற கிராமங்களில், வீடுகளில் இன்னும் தமிழே பேசி வெளியே சிங்களத்தையும் தமிழையும் கலந்து வழங்கும் குடிமக்களும் உளர். இவர்கள் யாவரும் நாள் முழுவதும் தென்னந் தோப்புக்களிலும் கடலிலும் தொழில் புரிந்து களைத்து இளைத்து வீடு சேரும் போது சிரமம் அதிகமாகும். ஆதலால் மேடைப் பேச்சுப் போலோ இலக்கண விதிவழுவாப் பேச்சுப் போலோ இல்லாது எளிய, இலகுவான, சுக உச்சரிப்புடன் சொற்களை ஒலியுருவாக்குவர். எனவே, அப்பூந்தை, நுப்பே சேம் என்னும் கிராமிய வழக்குக்கள் தோற்ற மெடுக்கும். இப்படியே, வந்து முடிஞ்சு என்னும் தொடக்கத்தனவாகிய வினை எச்சங்கள் வினை முற்றாக வழங்குகின்

றன. இவை பழைய இலக்கியங்களுள் தோன்றும் சொல்லுருவங்களாகிய பார்க்க, உந்து, வந்த, சென்ற, போற்றி, என்பன வினை முற்றுக்களாகவே வழங்கப்பட்டன போல, இக் கிராமங்களில் இன்றும், இவ்வழக்குக்கள் இருந்து வருவதைக் கண் கூடாகக் காணலாம். மேலும், 'வைத்து' என்னும் வினை யெச்சம் வழங்க வேண்டாது தவிர்க்கப்படக் கூடியதாயினும் உரையாசிரியர்கள் மொழிந்த உரைகளிலே 'வைத்தினை''ப் பரக்க வைத்துப் போயினர். இது இன்னும் சில தமிழ்ப் பகுதிகளில் வழங்குகிறது. ஆனால், எழுத்துக்கிரந்தங்களில் சிறப்பிடம் பெறுவதில்லை.

இனி, கறதறை, கோணி போன்ற திசைச் சொற்கள் 'கரைச்சல்' 'கோணமுள்ளது, (மூலையுள்ளது) என்ற கருத்துக்களில் வழங்குகின்றன. நிற்பாட்டல், வேண்டும், லோகும், என்ற சொற்கள் திரிபுற்று வழங்குகின்ற முறை, இவற்றிற்கு மட்டும் சொந்தமானதன்று. இவை போன்ற பல, இன்னும் ஆராயின் சேகரிக்கலாம்.

நல்ல சொற்கள் வாயினிற் புகுந்து மாற்றமடையும் வாற்றினை ஒரு இனிய சம்பவத்தால் விளக்குவோம். வடமாகாணத்து எல்லை, கொச்சிக் கடையில் முடிகிறது. இக் கிராமத்திற்கு வடக்கே தோப்புப் பாடசாலைகள் உண்டு. கொட்டரு முல்லை, நாத்தாண்டி தோப்பு என்னும் இக் கிராமப் பிள்ளைகள் புவியியலறிவு சிறக்க உடையவர்கள். ஆதலால், 5 ஆம் வகுப்பு மாணவன் ஒருவனிடம் ''நீ எந்த மாகாணத்தில் இருக்கின்றாய்? என்று ஒரு கேள்வியைக் கேட்டேன்.

துரதிட்டவசமாக எல்லாப்பிள்ளைகளும் கை உயர்த்த, அவன் மட்டும் தெரியாது விழித்தான். ஆதலால் மற்றொருவரிடமும் அக் கேள்வியைக் கேளாது அவனையே கண்டுபிடிக்கும்படி விட்டு விட்டு மறுவகுப்புக்களைச் சோதனையிடப் போனேன். விடுதிக்குப் போகும்போது, திரும்பவும் வந்து கேட்பதாகச் சொல்லிப் போன படியால் அவன் எப்படியோ அதனைக் கேட்டு அறிந்து நெட்டுருச் செய்தான்.


நான்திரும்பவும் அவனுடைய வகுப்பிற்குப் போக அரைமணிநேரம் சென்றிருக்கும். யாரோ அவனுக்கு ''வடமேல் மாகாணம்'' என்று சொல்லும்படி கற்பித்தனர். அவனும் அதனை நெட்டுருச்செய்தான். நானும் போய்த் திடீரென்று மறுபடியும் அக் கேள்வியைக் கேட்டேன். அவன் திடீரென்று. ''மடைமயில்வா(க)னம்''' என்று கூறிவிட்டான்! வடமேல்மாகாணம் — மடமேல்மாகாணம் — மடமேல் மாணம் — மடமயல் வாணம் — என்று எத்துணை மாறிச் சுலமாகிவிட்டதென்பதை அறியலாம். இப்படியே பேச்சு மொழிகள், காலத்துக்குக் காலம் உருமாறுபட்டுப் பாகத மொழிகளாகப் பரிணமிக்கின்றன. இது மொழி வழக்கு.

---

# 3,000 வருடங்களுக்கு முற்பட்ட கலாச்சாரம்

வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் நாகரீகம் எத்தகையது? எல்லா நாடுகளிலும் எல்லா மக்களுமே காட்டுமிராண்டிகளாக வாழவில்லை. ஆங்காங்கே சிறந்து விளங்கிய ராச்சியங்களும் உண்டு.


பிரட்கட்னிட்ஸ் என்னும் ஓவியர் ஸ்காந்திநேவியக் குகைகளில் மறைந்திருந்த பழங்கால ஓவியங்கள் பலவற்றைக் கண்டுபிடித்துள்ளார்.



3,000 வருடங்களுக்கு முந்தியதாகக் கருதப்படும் இந்த ஓவியங்களில் (படத்திலுள்ளது) திருமணச் சடங்குகள் போன்றவை சித்தரிக்கப்பட்டுள்ளன.

மார்ட்டின் விக்ரமசிங்ஹவின்

# நானும் ரிக்ஷாக்காரனும்



தமிழில்: எஸ்.எம். ஜே. பைஸ்தீன்

அப்பொழுது நான் பொரளை மின் வண்டி (ட்ரேம் கார்) தரிப்பிடத்திலிருந்து ஒரு மைலுக்கு மேல் தூரமில்லாத ஒரு இடத்தில் அமைத்திருத்த புத்தம் புது வீடொன்றில் தங்கியிருந்தேன். தினசரி காலையில் மின்வண்டி தரிப்பிடத்துக்கும், மாலை வேளையிலோ இரவிலோ கந்தோரிலிருந்து வேலை முடிந்து வீடு திரும்பும் போது தரிப்பிடத்திலிருந்து வீடுவரைக்கும் நடந்து செல்வது எனது வழக்கம். மழை நாளில் இரவாகி, அதன்பின் வீடு திரும்ப நேர்ந்தால் மட்டுமே நான் ரிக்ஷோவில் செல்வேன். ரிக்ஷோவில் நான் இருந்து விட்டே சென்றேனாயினும், பொரளை சந்தியிலிருந்த ரிக்ஷோக்காரர்களுள் ஒருவன் எனது நண்பனாகிவிட்டான்.

பணத்தை எவ்வளவு அதிகமாகக் கொடுத்தாலும் போதாது எனப் பழி வாங்குவதும், சிலவேளைகளில் குத்துக் கதைகள் சொல்வதும் ரிக்ஷோக்காரர்களதுவழக்கம். எனவே, கூலியை முற்கூட்டியே பேசிக்கொள்ளாமல் எக்காலத்திலுமே நான் ரிக்ஷோவில் போவதில்லை. இதைப் பழக்கமாகக் கொண்டிருந்தேன்.

இயன்றவரை கூலியைக் குறைவாகப் பேசிச் சென்று, பேசியதைக் காட்டிலும் ஐந்து சதமோ, பத்து சதமோ கூடுதலாக ரிக்ஷோக்காரனுக்குக் கொடுப்பது எனது பழக்கமாகிவிட்டது. மேலே குறிப்பிட்ட ரிக்ஷோக்காரனது ரிக்ஷோவிலும் முதன் முதலில் இப்படித்தான் கூலியைப் பேசிக் கொண்டு பயணம் சென்றேன்.

அன்று மழைநாள். நான் அவனது ரிக்ஷோவில் வீட்டுக்குச் சென்றதும் அவனிடம் பொருந்திய கூலியைக் காட்டிலும பத்து சதம் கூடுதலாகவே செலுத்தினேன். அன்று முதல் ரிக்ஷோவில் செல்லும் நாட்களில் நான் கொடுக்கும் காசு குறைவாக இருந்தாலும் கூட, அதை ஏதும் கூறுது எடுத்துக் கொள்வது அவனது தொழிலாகிவிட்டது.

அவனது இச் சுபாவம் அவனைப் பொறுத்தவரை லாபகரமானதாகவிருந்தாலும். எனக்கோ பெரும் நஷ்டத்துக்குக் காரணமாகிவிட்டது. நான் கொடுக்கும் பணத்தை மறுப்புக் கூறுமல் வாங்கும் எவருக்கும் குறைந்த பட்சம் ஐந்து சதமாதல் நான் அதிகமாகக் கொடுக்காவிட்டால் எனது மனம் நிம்மதியடைவதில்லை. அவனது ரிக்ஷோவில் சென்ற எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நான் கூலியுடன் ஐந்து சதமோ பத்து சதமோ மேலதிகமாகவே கொடுத்து வந்தேன்.

ஆரம்பத்திலேயே அவன் எனது சுபாவத்தை அறிந்து கொண்டு, நான் கொடுத்த கூலியைப் பதில் ஏதும் கூறுமல் பெற்றுக் கொள்வதால் என்னிடமிருந்து மேலதிகமான தொகையைப் பெறமுடியும் என எண்ணி அப்படிச் செய்தானே என என்னால் கூறுவதற்கில்லை. எனினும்

அவன் எனது பழக்கவழக்கத்தை நன்கு எடையிட்டு அறிந்து கொண்ட சாமர்த்தியசாலி என்பதை நான் பிற்பாடுதான் உணர்ந்தேன்.

இந்த ரிக்ஷோக்காரனது அறிமுகம் எனது மேலதிகச் செலவுக்கு ஏதுவாயும், ஆரோக்கியத்துக்குத் தடையாயும் அமைந்தது. நாள் முழுவதும் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்யும் எனக்கு வீட்டிலிருந்து மின் வண்டி தரிப்பிடத்துக்கும், மின் வண்டி தரிப்பிடத்திலிருந்து வீட்டுக்கும் நடந்து போவது உடற்பயிற்சியாகலாம். மாலையில் மின் வண்டியிலிருந்து இறங்கிய மாத்திரத்தில் அவன் ரிக்ஷோவைக் கொணர்ந்து என்னருகே நிறுத்தி விடுவான். அவனது நம்பிக்கையைச் சிதைத்து நடந்து போக மனம் இடந்தராது. அவன் ரிக்ஷோவைக் கொண்டு வந்து நிறுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் ரிக்ஷோவில் ஏறிக் கொள்வேன்.

படிப்படியாக நானும், அவனும் நண்பர்களாகி விட்டோம், ஆகையால் ஒரு நாள் ரிக்ஷோவில் போகும் போது அவனைப் பற்றி விசாரித்தறிய வேண்டுமென்று எனக்குத் தோன்றியது.

''நீ கலியாணம் கட்டி விட்டியோ?''

''கலியாணம்?''

அவன் சிரிப்பொன்றை உதிர்த்தவாறு இன்னும் வேகமாக ஓடலானான்.

''ஓம். நான் அப்பிடிக் கேட்டது ஏனென்றால் உனக்குப் பிள்ளைகள் இருக்குதா என்று தெரிஞ்சு கொள்ளத்தான்''

''எனக்கு விளங்குது துரை. நான் சொல்ல வந்தது அதைத்தான்'' அவன் பயண வேகத்தைக் குறைத்தான்.

''என்ர முந்தின பெண்சாதி வேத்து மனுசன் ஒருத்தனோடை ஓளிஞ்சு ஓடிப் போயிட்டா. அதுக்குப் பிறகு நான் வேற பொம்பிளை ஒருத்தியோட கூடிக்கொண்டு வந்திட்டேன். அவளுவ இல்லாம ஏலாது தொரை''

''ஒனக்குப் பிள்ளைகள் எத்தினை பேர் இருக்காங்க?''

நான் அவனது விவாகம், வாழ்வு, ஆகிய குப்பைகளைக் கிளற விரும்பாதவனாக வினவினேன்.

''புள்ளைங்க பதினாலு பேர் கெடச்சாங்க. நாலு பேர் உயிரோடை இருக்காங்கோ.''

''உன்ர வயசு?''

''என்ர வயசு அறுவது. ஓம் தொரை. இளந்தாரி ஒருத்தனுக்குச் சமமாகப் பாரமான வேலை எதயும் என்னால இன்னமும் செய்ய ஏலும்''

அவன் மீண்டும் வேகமாக ஓடலானான்.

அன்று என்னை வீட்டுக்குக் கொண்டுபோய் இறக்கிய இந்த ரிக்ஷோக்காரன் நான் தந்த கூலியை ஏற்காமல் வேண்டுகோள் ஒன்றை விநயமாக விடுத்தான்.

''நாளைக்கு நான் ரிக்ஷோக்கு லைசன்ஸ் அடிக்கோணும் தொரே. எங்கிட்டச் சல்லி கிடையாது. எனக்கு ரெண்டு ரூவா தாங்கோ. நான் அதை நாலு தடவையில திருப்பித் தந்துடுறேன். எனக்கு இண்டைக்கு தொரேக்கிட்ட கூலி வாணும்''

'இல்லை—இல்லை, கூலியை எடுத்துக்கோ''

நான் அவனது கைக்குள் இருபது சதத்தைத் திணித்தேன்.

சற்றே சிறிது நேரம் யோசித்த நான் வீட்டுக்குள் சென்று, முகப்புக்கு மீண்டும் வந்தேன். அவனுக்கு இரண்டு ரூபா கொடுக்கலாமா என்ற கேள்விக்கு முடிவு காண முடியாததாலேயே நான் உள்ளே சென்றேன். நான் முகப்புக்கு வந்தவுடன், அவன் மீண்டும் என்னிடம் விண்ணப்பம் விடுத்தான்.

"தொரே வீட்டுக்கு வாறப்போ நான் எந்த நாளும் கொண்டாந்து விட்டுடறேன். அதுக்குக் கூலி தேவையில்லை. எனக்கு இண்டைக்கு ரெண்டு ரூவா தாங்கோ"

"இந்தா ரிக்ஷோவுக்கு லைசன்ஸ் வாங்கு"

நான் அவனுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தேன். இரண்டு ரூபாவைப் பெற்றுக் கொண்டு பெரும் நன்றியறித டன் என்னை வணங்கிவிட்டு அவன் விரைந்து சென்றான்.

இவ்வளவு காலமும் நாளாந்தம் நான் மின் வண்டியிலிருந்து இறங்கியதுமே ரிக்ஷோவைக் கொணர்ந்து நிறுத்தும் அந்த ரிக்ஷோக்காரனை நான் கடன் கொடுத்தபின் என்றால் காண முடிந்ததே இரண்டு நாட்கள் கழித்துத்தான். மூன்றாம் நாள் அவன் என்னைக் கண்டவுடன் ரிக்ஷோவை அருகில் கொண்டு வந்து நிறுத்தினாலும், அவனிடம் முன்பெல்லாம் என்னைக் கண்டதும் எழும் ஆர்வத்தைக் காண முடியவில்லை. நான்காம் நாள் அவன் ரிக்ஷோவை என்னருகே கொண்டு வந்து நிறுத்தினான். ஆனால் அதற்குக் காரணம் மழைநாளானபடியால் அவனைக் குரல் கொடுத்து நானே அழைத்திருந்தேன். ஐந்தாம் நாள் என்னைத் தூரத்தில் கண்ட மாத்திரத்தே அவன் ரிக்ஷோவை வேறொரு பக்கமாக இழுத்துக் கொண்டு மறைந்து விட்டமையை நான் நன்கு அவதானித்தேன். ஏழு நாளைக்குப் பிறகு அவன் அந்த ரிக்ஷோத் தரிப்பிடத்தையே கைவிட்டு வேறொரு பிரதேசத்துக்குப் போய் விட்டான். அது கூட ஏனைய ரிக்ஷோக் காரர்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

"சிங்கள ரிக்ஷோக்காரனாக இருக்க வேண்டும் அவன்"

—இப்படி நான் கூறிய இக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தவரான குத்துக் கதைகளையே பேசுவதில் வல்ல எனது பண்டித நண்பர் கூறினார்.

"அவன் யாராக இருந்தாலும் இரண்டு ரூபா திருப்பக் கிடைக்காதை நான் பெரிய நஷ்டமாகக் கருதவில்லை"

எனது பண்டித நண்பரிடம் நான் தெரிவித்தேன்.

மனிதத்துவம் பற்றி நான் அறிந்திருந்தது சொற்பமே. அவனது மனதைப் புண்படுத்த விரும்பாமல் அவனது ரிக்ஷோவில் சென்றதால் எனக்கு மாதமொன்றிற்குக் குறைந்த பட்சம் ஐந்து சிலிங் (ஒரு சிலிங் 50 சதம்) ஆவது செலவாகிவிட்டது. உடற்பயிற்சியும் இல்லாமற் போய் விட்டது. அவன் இரண்டு ரூபாவை எடுத்துக்கொண்டு அவ்விடத்திலிருந்து போய் விட்டமையால் மீண்டும் நான் முன் போலக் கால் நடையாக வீடு திரும்ப வழியும் பிறந்தது. மாதமொன்றுக்கு ஐந்து சிலிங் செலவாவதும் எனக்கு மிஞ்சியது.

நன்றி: 'பாவிக்குக் கல்லெறிதல்'
(சிறு கதைத் தொகுதி)

## அணுக்கடிகாரம்

உலகத்திலேயே மிகச் சரியான நேரத்தைக் காட்டும் கடிகாரம் ஒன்று இப்போது ஜெர்மனியைச் சேர்ந்த பிரவ்ன்ஸ்வெக்கில் தயாராகி வருகிறது.

100,000 வருடங்களில் மட்டுமே இது ஒரு வினாடி முந்தும் அல்லது பிந்தும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அணுவின் உதவியுடன் இக்கடிகாரம் ஓடிக்கொண்டிருக்கும்.

விஞ்ஞான, விண்வெளி ஆராய்ச்சிகளுக்காகவே இக்கடிகாரம் தயாரிக்கப்படுகிறது.

புது வருடத்தைப்

புதுப் பொலிவுடன்

கொண்டாட

★

நவ நாகரிகமான

பட்டு, பருத்தி

பிடவைகளுக்கு

★

விஜயம் செய்யுங்கள்

★




**SP. பெரியண்ணபிள்ளை அன் கோ.,**

180, இரண்டாம் குறுக்குத் தெரு,

கொழும்பு-11.

போன்: 25738

# ஞானப்பிரவேசம்



## மு. சிவலிங்கம்

அவள் கதையைக் கேட்டதும் கரு நாகம் தீண்டியது போல் அவன் உடலெல்லாம் விஷம் ஏறியது......

அந்த அப்பாவித் தந்தை துடித்தான். குமுறினான். சித்தம் கலங்கினான். அவனுள் கொந்தளித்த உணர்வுகள் குமிழியிட்டுச் சிதறின.

—அந்தச் சூழ் நிலையில்,

வெறும் தேயிலைச் செடியைத் தவிர வேறு உலகமே தெரியாத ஒரு தோட்டத் தொழிலாளி நூறு மைல்களுக்கப்பால் வெளியே வந்து பாஷை புரியாத ஒரு சிங்கள நாட்டுக்குள் அகப்பட்டுக் கொண்டால் என்ன பண்ணுவான்? அவனுக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. வெறும் ஜடமாக நின்று கொண்டிருந்த அவன் ஆத்திரம் ஆற இப்படி ஒரு வார்த்தையை மட்டும் கேட்டுத் தீர்த்தான்.

''ஏண்டா...தடியா! இதுக்காடா என் புள்ளையை அனுப்பி வைச்சேன்......?''

இந்த ஆவேசமான வார்த்தையைப் புரிந்துகொள்ளாத அந்த மனிதனும் மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை முனியாண்டியிடம் நீட்டினான். அதை 'சடக்' கெனப் பிடுங்கிச் சுக்கு நூறாய்க் கிழித்து அவன் முகத்திலே திருப்பி அடித்தான் முனியாண்டி. ஆத்திரமடைந்த அந்த ஆள் வேகமாகத் திரும்பித் தன் காரை நோக்கிச் சென்றான்.

''இன்னைக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லே...அவனுக்கு ஒரு அறையாவது என் கையாலே குடுக்கணும்...'' என்று வெறியில் அந்த ஆசாமியின் பின்னால் ஓடினான் முனியாண்டி.

வண்டி பசக்கென இழுத்துப் பறந்தோடியது. முனியாண்டி வண்டி சென்று மறையும் வரை வைத்த விழி வாங்காது பார்த்துக்கொண்டேயிருந்தான்.

அறியாத ஊரில்...புரியாத பாஷையில் ... தெரியாத மனிதரோடு சகவாசம்...

தென்னையும் பலாவும் அடர்த்து படர்ந்து இருள் கவ்விக் கிடக்கும் அந்த நாட்டுச் சூழலிருந்து, மகளைக் கூட்டிக் கொண்டு பஸ் பிடிக்க நெடுஞ்சாலைக்கு வந்தான் முனியாண்டி. கந்தானை வரை நடந்து வந்து விட்ட அவர்களை, நீர் கொழும்பிலிருந்து ஓடி வரும் 'கோட்டை பஸ்' ஏற்றிக் கொண்டு வந்தது கொழும்பை நோக்கி.

கோட்டைப் புகையிரத நிலையம் தன் நெற்றியில் பதித்திருக்கும் கடிகார முள்ளை ஐந்துக்கு நேரே காட்டியது.

அட்டனைக் கடந்து புறப்படும் பதுளை வண்டியும் நான்காம் மேடையில் காத்திருந்தது. வண்டிக்குள் ஏறிய முனியாண்டி தன் மகளின் முகத்தைப் பார்க்க விரும்பாது ஜன்னலுக்கு வெளியே தலையைப் போட்டுக் கொண்டான்.

— வண்டியும் ஓடியது.

அவமானத்தை —இழிவை—மனித சேட்டையின் ஈனச் செயலை— அசுத்தத்தைக் கண்ணுற, மனமார விலை

கொடுத்து வாங்கிச் செல்லும் தனது சுய புத்திக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்ற ஏக்க நினைப்புக்கு விடை காண முடியாதவனைச் சுமைந்திருக்கும் அவனை வெகு வேகமாக இழுத்துச் சென்றாள் 'மெனிக்கே'

''இந்த வண்டி இங்கேயே தடம் புரண்டு விடக்கூடாதா...? நானும் இவளும் இப்படியே அழிந்து போனாலும் ஊர் உலகத்துக்கும் ஒன்றுமே தெரியாமல் போகும்! நடந்து விட்ட பழியை விபத்தின் மேலே போட்டு மறைத்துக் கொள்ளலாம்...''

முனியாண்டியின் மூளை கொதிக்கக் கொதிக்கச் செயல்பட்டுக்கொண்டிருந்தது.

அவன் வாடிக்கை வைத்திருக்கும் செலவு கடை முதலாளி செய்த சிபார்சில் வீட்டு வேலைக்காரியாகத் தனது பன்னிரண்டு வயது மகளை, மாதச் சம்பளம் பத்து ரூபாய் 'ரேட்' டோடு ஜாஎலையிலிருக்கும் ஒரு பணக்காரத் துரையின் பங்களாவுக்கு அனுப்பிவைத்திருந்தான்.

பெற்ற தாய்க்கு அணைந்த அடுப்பை ஊதிவிடக் குழல் எடுத்துக் கொடுக்கக் கூட உதவமுடியாத குழந்தைகள் அந்நிய வீடுகளுக்கு அடிமைகளாக விற்கப்படுவதுபோல் 'வலும் பல்வேலை' செய்ய நிர்ப்பந்திக்கப் படுகின்றன. சீமாட்டிகளின் தீட்டுச்சேலை கழுவவும், அவர்கள் கொஞ்சிக்குலாவிய படுக்கைகளைத் துப்புறவு செய்யவும், எச்சிக் கோப்பைகளைச் சுத்தஞ் செய்யவும், விடியவிடியக்கிணற்று நீர் இழுக்கவும், மாடு மேய்க்கவும் அந்தச் சிறுசுகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

—காரணம்.

அவைகள் அடிமைகளாய் அங்கு அனுப்பப் பட்டு சுதந்திரமாக அவர்களால் நடத்தப் படுகின்றார்கள்.

இந்தக் குறுகிய இடைவெளி நினைப்பில் முனியாண்டி திளைத்துக் களைத்தான். இப்படி ஒரு நிலையில் 'ஊழியம்' செய்யும் தன் மகளை மூன்று வருசத்திற்கு இது மூன்றாவது தடவையாக அவன் பார்க்கப்போய்...நடந்து விட்ட நாடகம்தான் இது...

''தோட்டத்தில் மாரியம்மன் திருவிழா நடக்கப் போகிறது... போய் மகளைக் கூட்டிக்கிட்டு வாங்க...புள்ளை கண்ணுக்குள்ளே கெடக்குது'' என்று 'கரைச்சல்' பண்ணிய மனைவியின் வாஞ்சையை மடியில் கட்டிக்கொண்டு கொழும்புக்குப் பயணம் செய்த முனியாண்டிக்குத்தான் இந்தக் கொடுவினை காத்திருந்தது.

அவனது அனுபவ ரீதியில் பத்திரிகைகளின் செய்திகள் எப்படியெப்படியெல்லாமோ பயமுறுத்தின. ''...வேலைக்காரிக்கும் வீட்டுக்காரிக்கும் நடக்கின்ற மோதல்கள்...'' ''வேலைக்காரப் பெண் கொலை செய்யப்பட்டாள்'' ''வேலைக்காரியைக் காணவில்லை'' இப்படியான எத்தனையோ மர்மச் சம்பவங்கள் பங்களாவாசிகளின் 'விளையாட்டுக்களில்' நடக்கின்றன...? எல்லாவற்றையும் ஓடும் றயிலுக்குள்ளேயே அசை போட்டுக்கொண்டு செல்லும் முனியாண்டி நீண்டவொரு பெருமூச்சுவிட்டான்.

''ஏழையாய்ப் பொறந்திட்டா என்னென்ன அநியாயமெல்லாம் காத்துக் கெடக்குது...பட்டினியாய்ப் போராடி நலிஞ்சாலும் மானத்தோடு வாழக்கூட எவ்வளவு எடைஞ்சலா இருக்கு...'' அவன் மனம் வேதனையால் வெதும்பியது. ''ச்சை! இனி ஒரு ஜென்மத்துக்கு இந்த மாதிரி நடந்துக்கக்கூடாது' முனியாண்டியின் ரத்த நரம்புகள் விண் விண்ணென்று தெறித்தன.

வீட்டையும், தோட்டத்தையும் அவனுக்கு வேண்டிய நாலு நல்ல மனுசர்களையும் நினைக்கும் போதெல்லாம் அவன் நெஞ்சில் நெருப்பெரிந்தது.

எந்த முகத்தோடு இன்றைக்கு இந்த நிலையில் மகளைக் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போவது என்று சஞ்சலப்பட்டு முடிவு காணத் துடிக்கும் முனியாண்டியை அதற்கு மேலும் சுமக்க மறுத்தது, அட்டனுக்கு வந்து விட்ட வண்டி.

பிள்ளையைக் கூட்டிக்கொண்டு இறங்கியவன், கர்ண கடூர இருளையும் பொருட்படுத்தாமல், தனக்கு நன்கு பழகிப் போன அந்தக் குறுக்குப்பாதையில் இறங்கி நடந்தான்.

— பக்கத்துத் தோட்டத்து 'பவுண்டரி' யைப் பிரித்துக்காட்டும் சடை சவுக்கு மரங்கள் காற்றில் அசைந்து பேயாட்டம் ஆடின.

— தோட்டம் நெருங்கிவிட்டது. மாரியம்மன் கோவிலில் வெளிச்சம் தெரிந்தது. இன்றைக்கு நாடகம் போடுகிறார்கள்... முனியாண்டிக்குத் திக் திக் என்று அடித்துக்கொண்டது. எல்லா லயத்துச் சனங்களும் இப்போது கோவிலில்தான் இருப்பார்கள். அந்தளவுக்கு அவன் தப்பித்துக் கொண்டான். பிள்ளையை யாருக்கும் தெரியாமலேயே வீட்டுக்குக் கொண்டு போய் ஆக வேண்டியதைக் 'கப்சிப்' பென்று முடித்துக் கொள்ளவேண்டும்...

போகவேண்டிய பாதையை விட்டுவிட்டு, கோவிலுக்கு மேலே போகும் சின்ன ரோட்டைக் கடந்து மருந்துக்காரன் லயத்து நாய்களுக்கு அகப்படாமல் பிரட்டுக் களத்துக் குறுக்குப்படியில் இறங்கும் படியாகப் போய்க் கொல்லைப் புறத்துக் கதவைத் தட்டினான். — கதவு திறந்தது.



வீட்டுக்குள் நுழைந்தும் நுழையாமலும் முத்தம்மா முழுகாமல் இருக்கிற விசயத்தை 'ஒன்னு ரெண்டாக'ச் சொன்னான். பாம்பை மிதித்தவளாய் விளக்குமாற்றைத் தூக்கிக் கொண்டு ''நஞ்சைத் தின்னவளே! அவளே!! இவளே!!' என்று அவள் குய்யோ முறையோ வென்று கத்தி முடிவதற்குள் அவளைச் சமாதானப்படுத்தி நடந்த உண்மைகளை விளக்கமாகச் சொன்னான் முனியாண்டி.


''செலவு கடை மொதலாளி சொன்னமாதிரியே அவன் ஒரு கோட்டும் சூட்டும் போட்ட தொரைதான்... கட்டிய பொம்பளையே 'சீ'ன்னு தொரத்துர அளவுக்கு அவ காலை சுத்திக்கிட்டுத் திரியிற ஒரு எச்சிப் பயலாம்...குடிச்சிப்போட்டு ரவு ஒரு மணிக்கும் ரெண்டு மணிக்கும் வந்து கதவைத் தட்டுவானாம்...அவன் வரும் வரையும் தூங்காம காத்திருந்து கதவைத் தொறப்பதுதான் நம்ம புள்ளைக்கு வேலை...அந்தப் பாம்பு நம்ப புள்ளையையும் ஒரு ராத்திரி கொத்தியிருக்கிறது! .........நல்ல நேரம் பார்த்து நான் போயும் வெஷத்தோட தான் திரும்பி வந்திருக்கேன்...''

''செலவுகடை கணக்கன் நாசமா போக! என் புள்ளைய கெடுத்தவன் வூட்டுல இடி வுழுக'' என்று அவன் மனைவி கதறிப் புலம்பினாள்.

''...மத்தவங்களை ஏசிப் பேசி என்னா பிரயோசனம்...? நம்ம மத்தியில அடிமைப் புத்தியும் அடிமை மனப்பான்மையும் இருக்கிறபோது மத்தவங்க ஆதிக்கத்தையும் அக்கிரமத்தையும் ஒழிச்சுக்கட்ட முடியுமா ...? வயித்துச் சோத்துக்காக இந்தமாதிரி ஈனத் தொழிலுக்கு புள்ளைய அனுப்பி வைச்ச என் தலையில உன் கையிலிருக்கிற வெளக்கு மாத்தால ரெண்டு சாத்து...''

சுயமரியாதையால் சுட்டெரிக்கப் பட்ட முனியாண்டியின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கொதி நீர் கொட்டியது.

அவன் மனைவி மருந்து அரைத்தாள்.



*Wear something gorgeous this* **NEW YEAR**

Make your choice from our exclusive ranges of latest FESTIVE SAREES, DRESS MATERIALS in variable selections for the NEW YEAR, BRIDAL GOING AWAY and all SPECIAL OCCASIONS.

- **MANGALA MANIPURI SAREES**—luxurious and distinctive in styles all embellished, with gold, silver & thread work.
- **SHALIMAR EMBROIDERED SAREES** In rich Bombay Fashion modes
- **COTTON DACCA SAREES**
- **PTD. & PLAIN BUTTER NYLON SAREES**
- **PTD. & PLAIN NYLEX SAREES** in enchanting new designs
- **PTD. & PLAIN VOILE SAREES**
- **PTD. & PLAIN COTTON DRESS MATERIALS**

EMBROIDERED LACE BLOUSES, DAINTY TEENAGE BLOUSES, HAND BAGS, BRASSIERES in new look styles

CHILDREN'S PARTY FROCKS
BOYS' NYLON SUITS
GENTS & LADIES HANKIES
ALSO A VARIETY OF OTHER NOVELTIES FOR FESTIVE & DAY-TO-DAY USE.

# EASTERN SILK EMPORIUM LTD.

"KING OF SAREES"

135, MAIN STREET — **COLOMBO**



# இதுவா நன்றிக் கடன்?

சாரணா கையூம்

அவளும் நானும் தனித் திருந்தோம்
அதுவோ பெரிய கலைக் கூடம்
கவலை இல்லாப் புன் சிரிப்பால்,
''களித்திட வாவா'' என் றழைத்தாள்.

அருகே சென்றேன் முத்த மிட்டேன்
அவளோ முல்லைப் பல் காட்டி
தருவைத் தழுவும் கொடி போலத்
தாவி என்னை அணைத் திட்டாள்.

கிண்ணம் நிறையச் சோறு வைத்து.
கிள்ளை மொழியால் எனை அழைத்தாள்
உண்ண அதனைப் பிசையச் சொல்லி,
''ஊட்டு ஊட்டு'' என்று சொன்னாள்.

பாலும் சோறும் கலந் தெடுத்து
பவள வாயில் ஊட்டி விட்டேன்,
காலைத் தூக்கி உதைத் திட்டாள்
கன்னத்தில் ஓங்கி அறைந் திட்டாள்.

''இதுவா நன்றிக் கட னெ''ன்றேன்
''இல்லை'' யென்றே தலை யசைத்தாள்.
புதுமை அவளின் செயல் கண்டு
பூரித் திருந்தே னவளென் மகளல்லவா?



எங்களிடம்

எல்லா விதமான

உயர்ந்த ரகமான

ஜவுளி தினுசுகள்

★

மலிவான

விலையில்

பெற்றுக்கொள்ளலாம்

# விஜித்தா டெக்ஸ்டைல்ஸ்

81-83, மேயின் வீதி,

கொழும்பு-11.

டெலிபோன்: 25440

# ஒரு நாய்ப் பயல்

கொழும்பு கோட்டைப் புகையிரத ஸ்தானத்துக்குள் ஓடி வந்த ஆறுமுகம்பிள்ளை, அவதியாக காங்கேசன் துறை நோக்கிக் காலை புறப்படும் யாழ்தேவியில் மூன்றாம் வகுப்புப் பெட்டி ஒன்றில் ஏறி ஒரு மூலை சீட்டில் உட்கார்ந்தார். தன் கையில் வைத்திருந்த பார்சலைத் தனக்குப் பக்கத்தில் வைத்து விட்டார்.

'கொழும்பிலும் மனுஷன் சீவிக்க முடியுமா' என்று மனதுக்குள் எரிந்து கொண்டார். புகையிரதத்தில் ஏறியதும் யாழ்ப்பாணம் வந்து விட்டது போன்ற நிம்மதி.

அவருக்குக் கொழும்பு வாழ்க்கை மிக அருவருப்பாகவும் வெறுப்பாகவும் இருக்கின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றலாகி கொழும்புக்கு வந்து ஒரு வருடம் கூட ஆகவில்லை. ஒவ்வொரு கிழமையும் யாழ்ப்பாணம் போயே தீருவார். திரும்பவும் யாழ்ப்பாணத்துக்கு மாற்றம் பெற்றுச் செல்வதற்குத் தமிழ் எம்பிக்களின் பின்னால் பலமுறை அலைந்து முயற்சித்துப் பார்த்தார். காரியம் முடியவில்லை.

வேறொன்றுமில்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள வாழ்க்கை அமைப்பும் ஒழுங்கும் கொழும்பில் எந்த மூலையிலும் இல்லை. தொழிலாளியும் சரி பெரிய உத்தியோகத்தரும் சரி, மேற்சாதிகாரனும், கீழ்ச்சாதிகாரனும் சரி எல்லோரும் பொது இடங்களில் ஒன்றாகக் கணிக்கப்படுகிறார்கள். கடைகளிலோ காரியாலயங்களிலோ, கோயில்களிலோ எங்கும் யாழ்ப்பாணத்திற் போல் சாதி, அந்தஸ்துப் பார்த்து அவரவரை அவரவர் இடங்களில் வைத்து நடத்தாமல் ஒன்றாகச் சமமாகக் கணிக்கப்படுகிறார்கள். அதைப்பற்றி யாரும் கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. அதனால் அவருக்கு அங்கு மதிப்பாக, கௌரவமாக வாழ முடியவில்லையே என்ற கவலை.

அவர் இருக்கிற போர்டிங்கிலும், அவர் சாப்பிடுகிற சைவக் கடையிலும் அவருக்குத் தெரிந்த, யாழ்ப்பாணத்தில் உள்ள கீழ்ச்சாதிப் பள்ளர், பறையர், நளவர்களும் அவரோடு சமமாகவே இருக்கிறார்கள். அது அவருக்குப் பெரும் தலையிடி. படித்து லோங்சும், கோட்டும் போட்டு தான் பார்க்கும் உத்தியோகம் செய்தாலும் கீழ்ச்சாதி கீழ்ச்சாதிதான் என்பது அவருடைய அசைக்க முடியாத கொள்கை.

தன் எண்ணங்களைக் கொழும்பில் வெளிப் படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் மனதுக்குள் எரிச்சல் தான்.

அவர் கொள்கையோடு ஒத்துப் போகும் நண்பர்கள் இருவர் வெள்ளவத்தையில் இருக்கிறார்கள். மாலை நேரங்களில் அவர்களைச் சந்தித்து தனது வயிற்றெரிச்சலை அவர்களோடு கலந்து கொண்டால் அவருக்குப் பெரும் ஆறுதல்.

இன்று அவர் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் கொடியேற்றத்துக்காகப் போகின்றார். அப்போது அங்கு அவர் இருப்பது அவசியம் என்று 'சைவப் பெரியோர்கள்' கடிதம் எழுதியுள்ளார்கள்.

'என்னடா இது புறப்படுகிதில்லையே' என்று தன் கைமணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டார்: தான் ஏறியதும் யாழ்தேவி புறப்பட்டிருக்க வேண்டுமென்பது அவருடைய ஆசை.

தான் இருக்கும் பெட்டியில் ஏறுபவர்களின் முகங்களை வெறுப்போடு நோக்கியவாறு இருந்தார். தன் அரு

யோ.பெனடிக்ற் பாலன்



கில் யாரும் அமர வந்தால் 'ஆள் இருக்கு' என்று தான் வைத்த பார்சலைக் காட்டிவிடுவார். ஆனால் பலர் அப்பெட்டியில் ஏறிக்கொண்டேயிருந்தார்கள். புகையிரதம் புறப்படுவதற்குச் சற்று முன்னதாக வந்த இளைஞன் அவர் வைத்த பார்சலை எடுத்துக் கீழே வைத்து விட்டு அதில்



அமர்ந்தான். 'ஆள் இருக்கு' என்று அவனுக்குக் கூறினார். ஆள் வந்தால் பார்ப்போம் என்று அவன் கூறிவிட்டான். அவருக்கு ஒன்றும் கூற முடியவில்லை. முகம் கடுத்தவாறு பார்சலைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டார்.

புகையிரதம் புறப்பட்டது.

அவர் இருந்த 'சீட்டில்' அந்த இளைஞனும், ஒருகிழவனும், கிழவியும் இன்னும் ஒருவரும் இருந்தனர். முன் 'சீட்டின்' மூலையில் ஒரு கறுத்த இளைஞன் புத்தகம் வாசித்துக்கொண்டிருந்தான். இன்னும் மூன்றுபேர் அதில் இருந்தனர்.

அவர் நிமிர்ந்து எல்லோரையும் ஒரு நோட்டம் விட்டார். கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒரு சிங்களவரையும் காணாததால் சிறு திருப்தி. சிங்களவரை அவருக்குக் கண்ணிலும் காட்டக் கூடாது. ஏனென்றால் அவர்கள் தான் கொழும்பில் உள்ள சமத்துவத்துக்குக் காரணம் என்பது அவர் முடிவு.

'இதற்குள்ளும் கீழ்ச்சாதிகள் இருக்கும்' என்று உள்ளே எண்ணிக்கொண்டு, தன்னைச் சுற்றி அமர்ந்திருந்த ஒவ்வொருவரையும் காலிலிருந்து தலை வரை அவதானித்தார். ஒவ்வொருவரின் உடுப்பு, உடுத்தியிருக்கும் பாணி, தமிழ்பேசும் முறை, முகத்தில் உள்ள செழிப்பு, சகலவற்றையும் கணக்குப் போட்டார்.

அவரால் யாரையும் இலேசாக இனங் கண்டுகொள்ள முடியவில்லை. அவரின் சொந்த ஊரான மாவிட்டபுரத்தில் என்றால், ஒவ்வொருவரையும் எந்தச் சாதி, என்ன பேர், எந்தக் குறிச்சி என்றெல்லாம் சொல்லி விடு

வார். அங்கு யாரைக் கண்டாலும், விசாரித்து ஆளைக் கண்டு பிடித்து விடுவார்.

அவர் நெஞ்சு நிமிர்த்திவாழ்வது அங்குதான். சைவ சமயத்தையும், அதன் உயர்வையும், புனிதத்தையும் கட்டிக்காத்து வரும் உயர் வேளாளர் மரபில் வந்தவராம். அவருடைய தகப்பன் கதிரேசம் பிள்ளை பெரிய நிலப்பிரபு. அவர் நிலத்தில், அவருடைய குடும்பப் பரம்பரைக்கு அடிமை, குடிசைத் தொழில் செய்து வாழும் கீழ்சாதிப் பஞ்சமர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்களாம். அவர்கள் சொன்ன இடத்தில் சொன்னபடி நிற்பார்களாம்.

தான் சும்மா இருந்து சாப்பிடக் கூடிய நிலப்பிரபுவாக இருந்தாலும் உத்தியோகம் பார்ப்பது ஒரு கௌரவத்துக்காக என்று அடிக்கடி கூறிக் கொள்வார்.

யாழ்தேவி பொல்காவலையைத் தாண்டிப் போய்க்கொண்டிருந்தது.

அவருக்குப் பேசாமல் சும்மா இருக்க முடியவில்லை. பக்கத்தில் உள்ளவர்களோடு பேசி அவர்களின் ஊர், சாதி என்பவற்றை அறிய விருப்பமாகத் தான் இருந்தது. ஆனால், அவர்கள் அவரோடு பேசும் சூழ் நிலையில் இல்லை. அதனால் முன்னால் இருந்த இளைஞனிடம் இருந்த தமிழ்த் தினசரி ஒன்றைக் கேட்டு வாங்கிப் படிக்கத் தொடங்கினார்.

பத்திரிகையின் முன் பக்கத்தில் சிறுபான்மைத் தமிழர்கள் மாவிட்டபுரம் கந்தசாமிக் கோவிலுக்குள் செல்வதற்கு ஆயத்தமாகிறார்கள் என்ற செய்தி இருந்தது. அவசரப்பட்டு முழுவதையும் வாசித்து முடிந்த அவருக்கு சிறுபான்மைத் தமிழரைப் பிடித்துத் தின்கின்ற ஆத்திரம் உள்ளே.

''என்ன பேந்தும் இவை கோயிலுக்கை போகத்திட்டம் போடினை போலயிருக்கு'' என்று சொன்னார். மற்றவர்களுக்குக் கேட்கவில்லை. இன்னும் சத்தமாகக் கூறினார்.

'ஓம், ஓம்' அவங்களும் ஏதோ உள்ளே போறதெண்டுதான் நிற்கிறுங்கள்' என்றார் அதே சீட்டிலிருந்த கிழவர். ஆறுமுகம்பிள்ளைக்கு அதைக் கேட்டதும் உற்சாகமாகப் போய்விட்டது.

''இந்தமுறையும் உந்தப் பஞ்சமற்றை இது சரிவராது, அங்கை பெரிய தொண்டர் படை ஆயத்தமாக இருக்கு. இவைக்கேன் உந்த ஆசை, இவ்வளவு காலமும் செய்தமாதிரி வெளியில் நின்று கும்பிட்டா என்ன'' என்றார்.

''அதுதானே அவைக்கி என்ன குறைஞ்சிடப் போகுது? இப்ப பாருங்கோ கடைசியா இவங்கள் தமிழனுக்கு அவமானம் ஏற்படுத்தினது தான் மிச்சம்''!

முன்சீட்டில் இருந்த லோங்ஸ் அணிந்த, தலைநரைத்தவர் கூறினார்.

மூலையில் இருந்த இளைஞன் கண்களை நிமிர்த்தி அவர்களைப் பார்த்து விட்டு இருந்தான்.

''சிங்களவர் எங்களை இருக்க விடுகிறுங்களில்லைப் பாருங்கோ! கேலி பண்றுங்கள்'' என்றார் ஆறுமுகம் பிள்ளை மனவருத்தத்தோடு.

''இவங்களுக்கு உந்த உஷார் எப்படி வந்ததென்று தெரியேல்லை?''

''வேறை ஆர்? சிங்களவர் கொடுத்ததுதான். அதோட இந்த கொம்யூனிஸ்டுகளும்தான். சீனக் கொம்யூனிஸ்டுகள்; பொல்லாத ராஸ்கல்ஸ்'. கிழவர் கேட்டதற்குப் பதில் கூறினார் ஆறுமுகம்பிள்ளை.

''அவையிடை கோலமும், அசிங்கமான உடுப்பு, ஊத்தை நாத்தம், அதுக்குள்ளே மற்றவர்களோட சமமா கோயிலுக்குள்ளையும் போக வேணுமாம்'' அவர் தொடர்ந்து தனக்குள்ளே புறுபுறுத்துக் கொண்டிருந்தார்.

மூலையில் இருந்த இளைஞன் அவர் முகத்தைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு இருந்தான்.

'கடவுளை வணங்குகிற இடத்தில உதெல்லாம் பாக்கக்கூடாது, காலம் மாறிக்கொண்டு போகும்போது நாங்களும் மாறவேணும். அவர்களையும் உள்ளுக்கு விட்டா அதில் என்ன வந்துட்டுது''

முன் சீட்டில் இருந்த ஒருவர் மிக ஆறுதலாகக் கூறினர். ஆறுமுகம் பிள்ளை சட்டெனத் திரும்பி அவரைப் பார்த்தார்.

''நீங்கள் என்ன புதுக்கதை பேசுறீங்க. காலங்காலமா கீழ்ச்சாதி களை கோயிலுக்கிள்ளை விடாமல் தடுத்து வைத்தவர்களெல்லாரும் மடையர்களே! அது அவங்களை விடப் படாது. விட்டா காலகதியல எங்கடை பிள்ளையளை கலியாணம் முடிக்கவும் கேட்பாங்கள். கோயில் கடவுள் இருக்கிற புனிதமான இடம். உந்த நாய்களை அங்கு விடப்படாது, என்று வெடுவெடுப்பாகக் கூறி முடித்தார்.

''அவர்களைத் தடுத்து வைத்தவர் கள் மடையர்கள். சாதி வெறி பிடித்த பிற்போக்குவாதிகள். அவர்களை உள்ளே விட்டால் என்ன?''

இதுவரையும் மௌனமாக மூலையில் உட்கார்ந்திருந்த இளைஞன் நிமிர்ந்திருந்துகொண்டு கூறினன்.

ஆறுமுகம்பிள்ளை அவனுடைய முகத்தை அவதானமாகப் பார்த்தார். இளைஞன் அவரைப் பார்த்துச் சொன்னன்,

''அவர்களை உள்ளை விடுகிறதினல் கடவுள் பாதிக்கப்படுவாரா? அல்லது கடவுள் கோபித்துக் கொள்வாரா?'' ஆறுமுகம் பிள்ளைக்கு ஒன்றும் கூறமுடி யவில்லை. அவனுடைய முகத்தைப் பார்க்கக் கொஞ்சம் உள்ளூரப் பயமா கவும் இருந்தது.

''நல்லூர்க் கந்தசாமிக் கோயி லைத் திறந்து விட்டு எல்லோரும் உள்ளே போய்க் கும்பிடுகிறார்கள். கடவுள் ஓடிவிட்டாரா? அல்லது கோயில் இடிந்துவிட்டதா? அல்லது உயர் ஜாதி மக்கள் எதிர்த்துக் கிளம் பினர்களா?''

''தம்பி சொல்வதில் நியாயம் இருக் குத்தான்'' அவன் இருக்கும் சீட்டில் இருந்த ஒருவர் சொன்னர்.

''கீழ்ச் சாதி என்று கூறப்படுகிற மக்கள் கோயிலுக்குள்ள போவதைக் கடவுளும் எதிர்க்கவில்லை, மக்களும் எதிர்க்கவில்லை. அவர்களை உள்ளே விடுவதால் காலங்காலமாகத் தங்க ளுக்கு இருந்த போலிக்கௌரவம், மதிப்புப் போய்விடும் என்று எண்ணு கின்ற சாதி வெறிபிடித்த சில படுபிற் போக்கு வாதிகள்தான் எதிர்க்கிறர் கள். அவர்களால்தான் தமிழ் மக்க ளுக்கு அவமானம். அவர்களைச் சமூகத் திலிருந்து அடித்து, உதைத்து விரட்ட வேணும்'' என்று கூறிய இளைஞன் ஆறுமுகம் பிள்ளையைப்பார்த்தான். அவர் கேட்காதவர் போல் வெளியில் பார்த்துக்கொண்டு இருந்தார்.

ஒருவரும் ஒன்றும் பேசவில்லை.

புகையிரதம் மாகோவில் வந்து நின்றது. அந்தப் பெட்டியில் மூன்று சிங்களவர்கள் ஏற வந்தார்கள். ஆறு முகம்பிள்ளை அவர்களைப் பார்த்து விட்டுச் சற்று இடமும் கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தில் கால் களைச் சற்று அகட்டி இடம்பிடித்து இருந்துகொண்டார்.

அனுராதபுரத்தைப் புகையிரதம் தாண்டும் மட்டும் அவர் மௌனமா கவே இருந்தார். அவருக்கு அந்த இளைஞன் மேல் சந்தேகம். கட்டாயம் அவன் கீழ்ச்சாதியாக இருப்பான் என்ற முடிவு — எப்படியும் அவனை அறிய வேண்டுமென்ற ஆசை.

அவனைப் பார்த்துக்கொண்டிருந்து அவன் அவரைப் பார்க்கும்போது சிரித்தார். அவனும் உதட்டில் சிரிப் பைக் காட்டினன்.

புகையிரதம் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

''தம்பி யாழ்ப்பாணத்தில எந்த ஊர்?''

''நான் சாவகச்சேரி!''

''சாவகச்சேரி எண்டால் சர சாலையோ?''

''இல்லை; மட்டுவில்!''

''மட்டுவிலா, மட்டுவில, என்ரை சொந்தக்காரர் இருக்கிறர்கள்.

பழைய விதானையார் சுப்பிரமணி யத்தைத் தெரியுமோ?''

''இல்லை!''

''அவைதம்பி, மட்டுவில் தெற்கு? நீங்கள்?''

''நான் மட்டுவில் வடக்கு''

''மட்டுவில் வடக்கென்றால் எனக்குத் தெரியும். நான் அந்தப் பக்கம் நல்லாப் புழங்கியிருக்கிறன்!''

''நான் இருக்கிறது மானுவலை!''

மானுவலை என்றதும் அவருக்கு உள்ளே தன் விசாரணை பலன் கொடுப்பதாக எண்ணிக் கொண்டார்.

''தம்பி உங்களுடைய தகப்பன் பேர் என்னதம்பி?''

''கந்தன்!''

''கந்தனோ! முழுப்பேர்?''

அரைகுறைப் பெயர்கள் கீழ்ச்சாதி மக்களுக்குத் தான் உண்டு. உயர் சாதி நிலப்பிரபுக்கள், அவர்களின் பெயர்களைக் கந்தன், பூதன், பட்டன் என்று அரையாக்கித்தான் வழங்கி வந்தார்கள்.

''கந்தன் தான்!''

ஆறுமுகம் பிள்ளைக்கு அவன் இருக்கும் குறிச்சியும், அவனுடைய சாதியும் நன்றாகப் புரிந்து விட்டது.

''அட அப்ப.........''

அவனுக்குச் சுற்றி வளைத்து விசாரிப்பது என்னத்துக்கு என்று நன்றாகத் தெரியும்.

''ஏன் நீங்கள் சுற்றி வளைக்கிறீங்கள். நானே சொல்றேன். நான் பறையர்என்று கூறப்படுகிற சாதியைச் சேர்ந்தவன். என்ரை தகப்பன் மேளம் அடித்தவர்!''

ஆறுமுகம் பிள்ளைக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது.

''சீச்சீ, நான் அதுக்காகக் கேக்கவில்லை'' என்றார். மற்றவர்களும் அவனை அதிசயமாகப் பார்த்தார்கள். அவன் தைரியமாக இருந்தான்.

புகையிரதம் இரைந்து கொண்டிருந்தது. ஆறுமுகம்பிள்ளை தான் உயர் வேளாளன் என்ற திமிருடன் நிமிர்ந்திருந்தார். அந்த இளைஞன் பற்றிய அபிப்பிராயம் அவர் மனதில் நன்றாகக் குறைந்துவிட்டது.

சற்றுநேரத்தின் பின் அவர் மீண்டும் அவனுடன் பேசினார்.


''உன்ரை பேர் என்ன?''

அவர் கேட்ட முறை அவனுக்குப் பிடிக்கவில்லை. பொல்லாத கோபம். என்றாலும் அடக்கிக்கொண்டான்.

''என் பெயர் முத்துக்குமார்''

''நீ இங்கை கொழும்பிலை எங்கே......''

திடீரென எழுந்த அவன் ஆறுமுகம் பிள்ளையின் கன்னத்தில் பளார், பளாரென ஆத்திரத்தோடுஅடித்தான்.



அந்தச் 'சீட்'டுகளில் இருந்தவர்கள் திகைத்து விட்டார்கள். மற்ற சீட்களில் இருந்தவர்களும் அடிச்சத்தம் கேட்டு எழுந்து பார்த்தார்கள்.

''ஏன் தம்பி அடிச்சனீர்?'' என்று அதே சீட்டில் இருந்த கிழவர் கேட்டார்.

''அடிக்கிறதில்லை, இவனை உதைக்க வேணும்! இவ்வளவு நேரமும் என்னோடை 'நீங்கள்', தம்பி என்று மரியாதையாகப் பேசிக்கொண்டு வந்தவன், நான் என்ரை சாதியைக் கூறின உடனே 'நீ' என்று மரியாதை இல்லாமல் பேசுறான். ஆனால் நான் மரியாகத்தான் இவனோடை பேசினனான். இவனுக்கு நான் என்னத்தில குறைஞ்சனான். நானும் மனிதன்தான், இவனும் மனிதன்தான்''

''எண்டாலும் தம்பி......''

''என்னங்கோ எண்டாலும்... இவ்வளவு நேரமும் இவன் என்னத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு வந்தான் எண்டு உங்களுக்குத் தெரியும். இது ஒரு பொது இடம். இங்கே எல்லாரும் வருவார்கள். இந்த இடத்

திலயே சாதித்திமிரிலதான் பேசிக் கொண்டு வந்தவன். இவன் ஒரு சாதி வெறி பிடித்த நாய்ப்பயல் சமயஞ் சொல்லுது, படிச்ச படிப்பு சொல்லுது, பெரியார்கள் சொல்கிறார்கள் சாதிபேசக்கூடாது என்று. அதற்குப் பிறகும் திருந்தாத இவனுக்கு நான் அடிச்சதில என்ன பிழை! மனிதனை மனிதனாக மதிக்கத் தெரிய வேணும்.''

அவன் உட்கார்ந்து கொண்டான்.

''தம்பி செய்தது சரிதான்''!

அந்தக் கிழவரே கூறினார்.

''இவருக்குக் குடுக்கத்தான் வேணும்''

என்று ஆறுமுகம்பிள்ளைக்குப் பக்கத்தில் இருந்த இளைஞன் கூறினான். ஒருவரும் அடித்ததற்காக அவனைக் குற்றம் சொல்லவில்லை. பலர் தாம் ஏன் பிறர் விஷயத்தில் வீணாகத் தலையிட வேணும், என்ற வழக்கமான யாழ்ப்பாணத்தமிழர் பண்பாட்டு உணர்வோடு அபிப்பிராயம் கூறாது மௌனம் சாதித்தனர்.

ஆறுமுகம்பிள்ளை அவமானத்தால் முகத்தை நிமிர்த்தமுடியாமல் தலை குனிந்தவாறு இருந்தார். ஒருவர் தானும், முதலில் தன்னோடு ஆதரவாகப் பேசியவர்களும் கூட தனக்குச் சார்பாக ஒரு வார்த்தையும் கூறவில்லையே என்று மனதுக்குள் எரிந்து வெடித்துக் கொண்டிருந்தார்.

புகையிரதம் மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது. இளைஞன் ஆறுமுகம் பிள்ளையை நோக்கியவாறு உட்கார்ந்திருந்தான்.

# எக்ஸ்-ரே மூலம் கண்டு பிடித்த



மரணத்தின் பின்னரும் வாழ்வுண்டு. அதுவே சுகவாழ்வு என்றும் சுவர்க்கத்தின் வாயில் என்றும் ஆதிகால எகிப்தியர் நம்பியதினால் தான் உலகப்புகழ் பெற்ற பிரமிட்டுகள் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

மன்னர்களின் சடலங்கள் கெட்டுப் போகாத வண்ணம் தைலங்களினாலும், கவசங்களினாலும் மூடப்பட்டு இப் பிரமிட்டுகளின் உள்ளே வைக்கப் பட்டிருக்கின்றன. இவற்றுடன் தளபாடங்கள், செல்வங்கள் யாவும் அடக்கம் செய்யப்பட்டிருக்கும்.

ஆனால் கவசங்களினால் மூடப்பட்டிருக்கும் சடலங்களைப் பற்றிய விவரங்கள் இதுவரை தெரியாமல் இருந்து வந்தன. இப்போது எக்ஸ்-ரே மூலம் அவற்றைக் கண்டு பிடிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள்.

டூடன் காமியன் என்னும் எகிப்திய மன்னன் ஒருவனுடைய கவசமிடப்பட்ட சடலமொன்று எக்ஸ்-ரே மூலம் ஆராயப்பட்டபோது, தங்கத்தினால் செய்த கைக் கவசங்கள் மற்றும் விலையுயர்ந்த ஆபரணங்கள் போன்றவை உள்ளே இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

எகிப்திய அரசினர் பிரமிட்டுகளின் சடலங்களை அப்புறப்படுத்துவதை விரும்பாததினால் இன்னும் பல மர்மங்கள் கண்டு பிடிக்கப் படாமலேயே போய் விடலாம் என அகழ்வு ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இதில் வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால் சில மன்னர்களின் சடலங்களுடன் எந்த விதமான ஆபரணங்களும் இருக்கவில்லை. காணாமல் போயிருக்கலாம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். இவற்றிற்கெல்லாம் என்ன நடந்தது?

திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்கலாம் என்கின்றனர் அவர்கள்!

இச் சடலங்கள் ஏறத்தாழ 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடகத் திறவு

கலாநிதி. கார்த்திகேசு சிவத்தம்பி

நாடகக் கலையின் ''ஈர்ப்புச் சக்தி'' யாது? ஈர்க்கப்பட்டவர், அக் கலையை நன்கு பயன் படுத்துவதற்கு, கலையின் காந்தக் காரணிகளை அறிந்து கொள்வது நல்லது.

ஒரு கருத்தினை அல்லது உணர்ச்சி நிலையை வெளிப்படுத்தி அதன் காரணமாகப் பிறருடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்துவதில் ஆக்க உத்வேகம் காணும் சுயதிருப்தி உணர்வு கலைகள் யாவுக்கும் பொதுவானவொன்றேயெனினும், நாடகத்தைப் பொறுத்த மட்டில், அவ்வெளிப்பாட்டு உறவு, கண்முன்னே இருக்கும் ஒரு குழுவினருடன் (பார்வையாளர்கள்) ஏற்படுத்திக் கொள்ளப்படுவதால் நாடகம் மற்றெல்லாக் கலை வடிவங்களையும் விட ''நேரடியான''தாக விளங்குகிறது. முன்னொரு காலத்தில் கவிதையும் இவ்வாறு நேரடியாக அநுபவிக்கப்பெற்ற ஒரு கலை வடிவமாகும். நடனமும் இத்தகைய ஒரு நேரடிக் கலைதான். ஆனால் அது தனக்கெனச் சில குறியீட்டு மரபுகளைக் கொண்டது. அக்குறியீட்டு மரபுகளிற் பரிச்சயமில்லாதவர்கள் நடனத்தின் முழுக் கருத்தினையும் கிரகித்துக்கொள்ள முடியாது. மேலும் நாடகத்து உத்திகள் சாஸ்திரீய நடனத்து உத்திகள் போன்று இறுக்கமானவையல்ல. (எனினும் நாடகமானது நடனத்திலிருந்து பூரணமாக விலகி நிற்க முடியாதென்பது வரலாறு கண்ட உண்மை.)

நேரடிக்கலையானமையால், கலைஞரும் பார்வையாளரும் தத்தம் தொழிற்பாடுகளால் இணைந்து நிற்கின்றனர். ஒருவரின் உணர்ச்சிப் பூரணத்துவம் மற்றவரின் உணர்ச்சிப் பூரணத்துவத்திலேயே தங்கியுள்ளது. அந்த இரண்டு உணர்ச்சி நிலையும் சங்கமிக்கும்பொழுது தோன்றும் அனுபவத்தை ''பங்குகொளல் அனுபவம்'' —(participatory experience) என்பர். மேலைநாடுகளில், சிறப்பாக அமெரிக்க ஒன்றியத்தில், இக்கோட்பாடே நாடகக் கலையின் முக்கிய அமிசமாக இன்று போற்றப்படுகின்றது.

நாடகக் கலையின் அடிப்படை ''உந்துசக்தியாம்'' இதனை நாம் விளங்கிக்கொண்டால் நாம் ஏன் நாடகக் கலைஞர்களாகவும் நாடகப்பிரியர்களாகவும் இருக்கவிரும்புகின்றோம் என்பது தெரியவரும்.

## கோட்பாட்டுத் தெளிவுக்கான ஒரு குறிப்பு

ஆனால் மேற்போந்த விளக்கம், கலைநிலைப்பட்ட ஒன்றாகவேயுள்ளது. இத்தகைய 'கலைநிலை' விளக்கங்கள் கலைபற்றிய திரிபுபட்ட விளக்கங்களுக்குக் காரணமாகவமைந்து வருவது வழக்கம். எனவே இக்கருத்தின் 'சமுகநிலை, விளக்கத்தினை அறிந்து கொள்வது அவசியமாகும்

நாடகக் கலையின் முக்கியத்துவத்தை, ஜோன் நாஷ் எனும் சமுகவியலாளர் விளக்கும் முறைமையைக் கூர்ந்து கவனித்தலவசியமாகும். அவர் கூறுவது இதுதான்: ''ஒரு சம்பவத்தை நாடகமாக நடித்துக்காட்டுகிறோம் என்னும் பொழுது, உளவியற், சமுக நடவடிக்கைகளைக் குறியீட்டு முறையால், சுருக்கமாக எடுத்துக் கூறுகின்றோமென்பதுதான் கருத்தாகும். (நாடக வழக்குக்கு உரையாசிரியர் தரும் விளக்கத்தை நினைவூட்டுவதாக அமைகின்றது இக்கூற்று.)

சமயச் சடங்காக ஆடப்பெறும் நாடகங்கள் எவ்வாறு பண்பாடானது வழிவழியே வருஞ்சந்ததியி

னருக்கு எடுத்துக் காட்டப்படுகிறதென்பதையும் மரபு எவ்வாறு காலத்துக்கேற்றவாறு அமைக்கப்பெறுகின்றதென்பதையும், எடுத்துக்காட்டுகின்றன. நாடகத்தின் மூலம் மக்களின் கருத்து நோக்குக்களும் பண்பு மதிப்பீடுகளும் எவ்வாறு மாற்றியமைக்கப்படுகின்றன என்பதைச் சமுகவியல் அறிஞர் இன்னும் நன்குணரவில்லை. ஆனல், காலம் காலமாக இம்மாற்றத்தை ஏற்படுத்தவே நாடகாசிரியர்களும் நடிகர்களும், நெறியாளர்களும்—தெரிந்தும் தெரியாமலும்—முயன்றுள்ளனர்''.

நாடகத்தின் சிறப்பமிசமான ''பங்குகொள்ளல் அனுபவ''த்தின் சமுதாய முக்கியத்துவம் இப்பொழுது நன்கு புலனுகின்றது.

மேலும், இப் பரஸ்பர உறவின் தன்மை பற்றியும் இது எவ்வாறு தோற்றுவிக்கப்படலாம், பேணப்படலாம் என்பன பற்றியும் செய்யப்படும் சிந்தனை, எதனை நடித்துக் காட்டுவது எப்படி நடித்துக்காட்டுவது என்ற பிரச்சினைகளுக்கு விடை தருவதாக அமையும்.

அடுத்து ஆராயப்படவேண்டியது நாடகம் பற்றிய மரபாகும். நாடகம் என்பது உலகெங்கும் காணப்படும் கலையெனினும், அது பயிலப்படும் ஒவ்வொரு பிரதேசத்திலும், அதன் கால, தேச, வர்த்தமானங் கட்கியைய ஓர் அமைப்பு முறையினைப் பெற்றுவிடுகின்றது; அதாவது ஓர் உருவத்தைப் பெறுகின்றது. முன்னர் குறிப்பிட்ட 'பங்கு கொளல் அனுபவ'ப் பூரணத்துவத்துக்கு, பார்வையாளனுக்கும், கலைஞனுக்கும், நன்கு தெரிந்த உருவ மரபு முக்கியமாகும். புறச் சக்திகளின் செல்வாக்கு, தாக்கம் ஆதியன ஏற்படும் பொழுதும் மரபு நிலைக்கேற்பவே அவை ஏற்படுகின்றன. நாடகம் நேரடிக் கலையானதால், இம்மரபு அவ்வப்பிரதேசத்து மக்களின் மரபுடனேயே இணைந்து நிற்கும்.

தமிழ் நாடகத்தைப் பொறுத்த மட்டில் (இது பொதுவில் எல்லா இந்தியா நாடகங்களுக்கும் பொருந்துவதே) எமது வரலாறு காரணமாக இருநிலைப்பட்ட வளர்ச்சி தோன்றியுள்ளது. அந்நிய ஆட்சியும், ஏகாதிபத்தியத்தின் சமுகநிலைத்தாக்கமும் இதற்குக் காரணமாக அமைந்தன. நாடகம் பற்றிய உண்மையான மக்கள் மரபு, அம்பக்களின் பொருளியல், அரசியற் பராதீனம் (Economic and Political alienation) காரணமாகக்கிராமியக்கலையாகத் தாழ்ந்தது. இவ்விடத்தில் நாட்டுக்கலை (folk arts) க்கும் கிராமியக்கலை (Village peasant arts) க்குமுள்ள வேறுபாட்டினை மனத்திருத்திக் கொள்ளல் அவசியம்). அந்நிய சக்திகளின் செல்வாக்குக் காரணமாக அச்சக்திகளுடன் இயைந்து கிடந்த ஒரு புதிய நாடக உருவமும் தமிழ் நாட்டை வந்தடைந்தது. இலக்கியத்தில் இத்தகைய சக்திகள் புதிய இலக்கிய வகைகளைத் தோற்றுவித்தன என்பது உண்மையே. அவையும் முதலில் தோன்றும் பொழுது அந்தப் புதிய சமுகத்தினரையே பிரதிபலித்தன. ஆனல் மொழியின் பொதுமை காரணமாக அவ்விலக்கிய வகை விரைவில் மக்களிடையே பரவிவ. நாடகம் நேரடிக் கூட்டுக் கலை (Collective art) ஆனமையின் அது இணைந்து நிற்போரின் சமுகப் பண்புகளை இலக்கியத்திலும் பார்க்க நீண்ட காலம் பேணும் தன்மையுடையது. இதனல் எமது நாடக மரபில் இரு வேறுபட்ட நாடக முறைகள் காணப்படுகின்றன.

(அ.) கிராமப் புறங்களிற் காணப்படுவன. அதாவது புராதன பொருளாதார, சமுக அமைப்புக்கள் பூரணமாக உடைக்கப்படாத விடங்களிற்பயிலப்படுவன.

(ஆ) மேனட்டுத் தொடர்புள்ள, நகர்ப்புற நிலையிற் காணப்படுவன.

வரலாறு மாற்றப்பட முடியாதது. ஒன்றைவிட்டு மற்றென்றை மாத்திரம் விரும்பி நின்று அதற்காகத் தாபப்படல் அறியாமை. இரண்டையும் இணைப்பதிற்றான் நாடகத்தின் சுபிட்சமான முன்னேற்றம் தங்கியுள்ளது. பொருளாதார, சமுகத் துறைகளில் எவ்வாறு பிரதேசத் தேவைகளையும் வழக்குகளையும் புதிய முன்னேற்றங்களையும் இணைத்து நல்வாழ்வு காணத் திட்டமிடுகின்றேமோ அதே போலக் கலைத்துறை உயர்ச்சிக்கும் இணைப்பு முயற்சிகளைமேற்கொள்ளல் வேண்டும்.

இன்றைய சமுக, அரசியல் நிலையில் நாடகத்தின் — பொதுவாகக் கலையின் —மக்களடிப்படை போற்றப்படவேண்டியுள்ளது. புவியியலும்,

பொருளாதாரமும், சமுக சம்பிரதாயங்களும், எவ்வாறு ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்கட் குழுவினரை இணைய வைக்கின்றனவோ, அவ்வாறே கலைகளும் அவர்களின் ஒருமையை எடுத்து உணர்த்துவனவாகும். புறத்தேவைகள் காரணமாகத் தோன்றிய அகச் சமுகப் பிரிவையகற்றிச் சமுகத்தின் ஒருமையையும் ஒற்றுமையையும் நிலை நிறுத்துவதற்குப் பொதுக்கலையும் கூட்டுக்கலையுமான நாடகத்தைப் பயன் படுத்தல் வேண்டும். நகர்ப்புற, கிராமப்புற சமுதாயக் கூறுகளின் இணைவை நாடகத்தின் உத்தி முதல் கதையீருகயாவற்றிலும் காணவேண்டும். அப்பொழுதுதான் நாடகம் பண்பாட்டுத் துறை முயற்சியாக விளங்கும் (அன்றேல் அது வெறும் விருப்பு முயற்சியாக நின்று விடும்.)

ஆனால் இன்னேர் அமிசமும் உண்டு. — அதுதான் நாடகம் திறமை வெளிப்பாட்டு வாயிலாக மட்டுமே தொழிற்படும் ஒரு நிலை. சமுகத்தின் பிற ஆக்கத் துறைகளிலே ஈடுபடாத, ஈடுபட வாய்ப்பில்லாத, ஆனல் சுய திறமைபற்றிய தன் உணர்வுள்ள தனி மனிதர்கள் பலரை எமது நகர்ப் புறங்களிற் காணலாம். அடித்தளக் கல்வி, போதிய சமுதாய முன்னேற்ற வாய்ப்பின்மை, நவ பொது ஜனத் தொடர்புச் சாதனங்களின் (திரைப்படம், வானொலி, பத்திரிகை போன்றவை) செல்வாக்கு ஆதியன இத்தகைய ''திறமை வெளிப்பாட்டு வாயில்'' முயற்சிகளுக்குக் காரணமாக அமைகின்றன. இத்தகையோருக்கு நாடகமும் நாடகத்திற்காகச் செய்யப்படும் பூர்வாங்க முயற்சிகளும் தன்னிறைவற்ற அன்றாட வாழ்க்கையினின்றும் தம்மை விடுவித்து தாம் வாழவிரும்பும் இலட்சிய உலகின் நெறிக்கேற்பக் கணநேரம் தானும் வாழுவதற்கும், வாழ முயற்சிப்பதற்குமான நடவடிக்கையாக அமைந்து விடுகின்றன. (அதாவது நாடகம் காட்டுகின்றன. ''மெய்போலும் நிலையை''த் தமது இலட்சியத்துடன் இணைத்து நோக்குவது) இத்தகையோர் கூட்டாகச் சேர்ந்து நாடகத்தைத் தயாரிப்பினும், நாடகத்தைத் தத்தம் திறமை வெளிப்பாட்டு வாயிலாகவே கருதுவர். நடிகர் நாடகம் போடுவது, கதாசிரியர் நாடகம் போடுவது போன்ற முயற்சிகள் இம் மனோநிலை காரணமாகவே தோன்றுகின்றன. இத்தகைய முயற்சிகளின் சமுக நிலைத்தாக்கம் யாது? இதுவரை பார்த்தவற்றைக் கொண்டு, இது சமுக நிலையின் ஒரு பிரதிபலிப்பு என்பது புலனாகின்றது. இதுவே சமுகத்தை மாற்றுங் கலா சக்தியாக அமைந்து விடாது. அவ்வாறு மாற்றும் சக்தியாக்க வேண்டுமெனில் இம் முயற்சிகளைக் கட்டுப்பாட்டுக்கு நெறிக்குட் கொண்டு வரல் வேண்டும். மறிநிலை காரணமாக (negative forces) தோன்றும் ஒரு முயற்சியை நேர்நிலை ஆக்கமாக (positive effort) மாற்ற வேண்டும். அப்படி மாற்றுபவர் கலை பற்றிய பூரணமான சிந்தனைத் தெளிவுடையவர்களாக விருத்தல் வேண்டும். அப்பொழுது நாடக முயற்சிகள் நாடக இயக்கமாக மாறும்.

சி. என். அண்ணாத்துரை நாடகக் கலை கொண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்ததை இங்கு மனங் கொளல் வேண்டும். அவர் தேவைகளுக்கும்கண்ணோட்டங்களுக்கு மியையத் தமிழ் நாடகங்களையமைத்தார். அரசியற் கூட்டத்திற் கூறமுடியாதனவற்றை, அதே மேடையிலே கூட்டத்தின் பின்னர் நாடகத்தாற் காட்டினர். அண்ணாத்துரையின் அரசியல் தந்திரம் நாடகக் கலையில் ஒரு புதிய பாணியை உண்டாக்கிற்று.

ஈழத்தின் இன்றைய நிலையில் நாடகம் தனது சமுகப் பணியைச் செய்ய வேண்டியுள்ளது. எனவே நாடகங்கள் சமுதாய நோக்குடையன வாகவும், முற்போக்குப் பண்புடையனவாகவும் அமைதல் வேண்டும்.

சென்ற தசாப்தத்திலே தோன்றிய ஓர் இயக்கம் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களை இணைத்து ஈழத்துத் தேசிய இலக்கியத்தை வளர்த்தது. நாடகத்துறையில் இன்று காணப்படும் புத்தூக்கத்தை நெறிப்படுத்தி, ஈழத்துத் தமிழ் நாடகம் எனும் புதிய தொரு கலைவடிவம்—புதியதும் பழையதுமிணைந்த ஒரு கலைவடிவம்—தோன்ற வாய்ப்பளிக்கும் ஒரு நாடக இயக்கம் இன்று அவசியம்.

''நாடகம் நாடகத்திற்காகவே'' என்ற கோட்பாடு தோன்ற முடியாதாகையால், இவ்வியக்கத்தின் அடிப்படைக் கோட்பாடு எதிர்க்கப்பட மாட்டாது; விளங்கப்படாதிருக்கலாம், விளக்குவது இயக்கத்தின் அத்தியாவசியத்தை உணருவோரது கடமையாகும்.

உங்கள்

அச்சு வேலைகள்

எல்லாவற்றிற்கும்

★

எம்மிடம் தொடர்புகொள்ளுங்கள்

★

லங்கா

எஸ்டேட் அன் கொமர்ஷியல் பிரின்டர்ஸ்

த. பெ. இலக்கம் 380

கொழும்பு

டெலிபோன்; 25329 தந்தி: "ESTAPRESS"

# வனவாசம்

**• சொக்கன்**

**பாத்திரங்கள்:**

**கைகேயி, பரதன், மந்தரை, சத்துருக்கன், இராமன்**

மற்றும்

**இலக்குமணன், நாட்டுமக்கள், பேரிகை முழக்குவோன் முதலியோர்.**

(அயோத்தி நகர வீதி. எங்கும் மக்கள் திரண்டு நிற்கின்றனர். பேரிகை முழக்குவோன் தனது பேரிகையை முழக்க மக்களின் ஒலி அடங்க, அவர்கள் அவன் கூறுவதைக் கேட்கின்றனர்.)

பே. மு.:-

அமைதி! அமைதி! அயோத்தி நகர மாந்தர் காள்! உங்களுக்கு ஓர் ஆனந்தச்செய்தி. மக்களுள் ஒருவன்:– (கேலியாய்ச் சிரித்து) ஆனந்தச் செய்தி! கடந்த பல்லாண்டுகள் நடைப் பிணங்களாய்த் திரியும் எமக்கு ஆனந்தம் எங்கிருந்து வரும்?

வேருெருவன்:- (வேதனையோடு) அல்லையாண்டமைந்தமேனி அழகனும், அவன் துணைவியும்; இளவலும் காடு சென்றூர்களே? அன்றேடு எங்கள் ஆனந்தமும் அஸ்தமித்து விட்டது.

இனி எமக்கு ஏது ஆனந்தம்.

(சிலர் ஸ், ஸ் என்றுசப்தமிட்டும், அமைதி, அமைதி என்று கத்தியும் அமைதியை உண்டாக்குகின்றனர்.)

மற்றொருவன்;- பேசாதீர், வள்ளுவன் சொல்வதையுங் கேட்போம்.

முன்பேசியவன்:- நன்று நீ சொல்.

பேரிகையாளன்:-

அயோத்தியின் அரசன், எமது அன்பின் திரு உருவம், சக்கரவர்த்தித் திருமகனும் தசரத புத்திரன் நாளை நாடு திரும்புகிறுர். வீதியெல்லாம் விழாக்கோலம் பூணட்டும்.

(மகிழ்ச்சி ஆரவாரம் கடலலை போல் எழுகின்றது. 'ரகு நந்தனன் வாழ்க! இராமபிரான் வாழ்க! அறத்தின் செம்மல் வருக! அவர் வரவு நல்வரவாகுக! என்று மக்கள் கோஷம் எழுப்புகின்றனர்.)

பேரிகை:-

தெருவெல்லாம் மாலைகளும் மகரதோரணங்களும் தூங்கட்டும். திக்கெல்லாம் ராமகோஷம் கிளம்பட்டும். நாடெங்கும் அழகும் பொலிவும் அலங்காரங்களும் பூத்துப் பொலியட்டும். மீண்டும் எம்நாட்டில் மகிழ்ச்சிபெருகட்டும். மாநிலங் காவலனும் மன்னர் மன்னவன் புகழ் ஓங்கட்டும். இது இளவரசர் பரதரின் வேண்டுகோள்.

("ராம், ராம், ஜயராம்! சீதாராம்! ஜெயஜெயராம்!" என்று ஒரு மித்த ஒலி எழுகின்றது. எங்கும் பேராரவாரம் மிகுகின்றது. ஆனும்

பெண்ணும் சேர்ந்து ஒத்த குரலிற் பாடிஆடுகின்றனர்.)

### பாட்டு

ராம ராம ராமனவன் வந்தானும்

ராச்சியத்தின் வேந்தர் வேந்தன்
வந்தானும்

வான் பயிர்க்கு மழை முகிலாய்
வந்திட்டான்

வானவர்க்கும் வானவனே வந்திட்
டான்

('ராம ராம ஜெயராம், சீதாராம்' என்ற ஒலி இடையில் எழுகின்றது. பேரிகைகளும் வீணை இசையும், மற்றும் வாத்தியங்களின் ஒலியும் சந்தம் பிசகாது எழுகின்றன.)

செத்த உடலில் உயிரும் வந்து சேர்ந்
ததே

தேசமின்று செந்திருவைக் கண்டதே

பத்தியிந்த நாட்டிலோடிப் பரவுதே

பாரிலெங்கும் அன்பு பெருகி ஓடுதே

(ராம் ராம் ஜயராம் சீதாராம்— ஒலி வாத்தியங்களின் கூட்டிசை)

பத்திஞேடு நான்கு வருடம் சென்றதே
பாலைவனமும் சோலையாக மாறுதே!

முத்து முறுவல் பூக்க ராமன் வருவனே
முகையவிழ்ந்த பூவாய்ச் சீதை மலர்
வளே.

(ராம் ராம் ஜயராம் சீதாராம்— ஒலி வாத்தியங்களின் கூட்டிசை.)

வீரனந்த லக்குவனும் வருவனே

வீறுகால நடைபயின்று வருவனே

சோரனந்த ராவணனைக் கொன்றவச்

சோதரனின் பின்னரின்று வருவனே

(ராம், ராம் ஜயராம் சீதாராம் —ஒலி வாத்தியங்களின் கூட்டிசை)

### காட்சி இரண்டு

(பின்னணியில் இடைவிடாது சந்தம் இசைந்து நகருகின்ற அருவியின் ஓசை கேட்கின்றது. நந்திக் கிராமத்தில் ஒரு குடிசை. பரதன் பாதுகைக்குமுன்னுல் மரியாதையாக அமர்ந்திருக்கிறுன்).

பரதன்:-

(சோகத்தாற் குரல் தளதளக்க) **அண்ணு!** பதினுன்கு ஆண்டுகள் இந்த நந்திக் கிராமத்திலே உன்பாதுகையே துணையாக இராச்சிய பரிபாலனத்தை நடாத்தி விட்டேன். உனக்கு, என் தாய் இழைத்த கொடுமைக்காக நான் கண்ணீர் விடாத பொழுதே இல்லை.

என் நெஞ்சிலே சோகத்தின் பாரம், தோள்களிலே இராச்சியத்தின் பாரம், கண்களிலே முட்டி, மடைதிறந்து ஓடத் துடிக்கும் கண்ணீரின் பாரம்! இவற்றைச் சுமந்துகொண்டு இன்னும் எத்தனைவினுடிகள் காத்துக் கிடப்பது? இந்தப் போது எப்போது விடியும்? உன்னையும், எனதண்ணியையும், தம்பியையும் நான் எப்போது காண்பேன்?

(கிறீச், என்று செருப்புச் சத்தமிடச் சத்துருக்கினன் உள்ளே வருகிறுன். பரதன் கோபத்தோடுதிரும்புகிறுன்.)

பரதன்:-

(வெகுளியோடு) சத்துருக்க! உனக்குப் பைத்தியமா பிடித்து விட்டது? எமது அண்ணுவின் பாதுகை இருக்கின்ற இந்தப் புனித இடத்திற்கு வரும்போது ... கழற்றி எறி செருப்புக்களை; கைகட்டி வாய் புதைத்து வந்து இந்தப் பாதுகைகளை உன் தலையிலே சூட்டிக்கொள்.

சத்:-

(செருப்பைக் கழற்றி விட்டு வருகிறுன்.) நடுங்கும் குரலில், மன்னிக்க வேண்டும், அண்ணு! பெரியண்ணு நாளை வரப்போகிறுர் என்ற மகிழ்ச்சிப் பெருக்கால் நடந்துவிட்ட அபச்சாரம்! இதோ பெரியண்ணுவின் பாதுகைக்கு எனது அனந்தகோடி சாஷ்டாங்க நமஸ்காரங்கள் (விழுந்து வணங்குகிறுன்)

பரதன்:-

சரி! எழுந்திரு. அண்ணு வரும் ஆனந்தச் செய்தியை அயோத்தி மக்களுக்கு அறிவித்து விட்டாயா?

சத்:-

(சிரித்தபடி) அதை ஏன் கேட்கிறீர்கள்? செய்தியைப் பறையறைந்து

செப்பிய வள்ளுவனை அவர்கள் பிழிந்தெடுத்து விட்டார்கள்.

பரதன்:-

என்ன?

சத்:-

மகிழ்ச்சியின் எல்லைகடந்த பரவச நிலையில், வள்ளுவனைத் தூக்கிப்பந்தாடி விளையாடினார்கள்...

பர:-

(சிறிதே சிரித்து) அப்படியா? உம் ...அலங்காரங்கள் தொடங்கிவிட்டனவா?

சத்:-

சில கணங்களிலேயே நாடு அமராவதியையும் வெல்லும் அழகுக் கோலத்தைப் பெற்று விட்டது. மாதரின் மணமாலைகளும் முத்தாரங்களும் வீதிதோறும் தூங்கி இரவைப் பகலாக்குகின்றன. சித்தத்தைத் தம்பால் பற்றி இழுக்கின்றன. கமுகுகளும், வாழைகளும் கன்னிமை கழியாச் சிறுமிகள் போன்று மதர்த்து நிற்கின்றன வீதியெங்கும்....

பரதன்:-

(பத்தி பாவசத்துடன்) வீதிகளும் மனைகளும் விழாக்கோலம் பூணும். அண்ணாவின் வருகையால் மக்களின் இதயங்களே கோயில்களாகும். அங்கு ஒளியும் புனிதமும் மகிழ்ச்சியும் ஒட்டி உறவாடும். இல்லையா?

சத்:-

அதற்கு என்ன ஐயம்?...அண்ணா!

பர:-


என்ன? சொல்...

சத்:-

பெரியம்மா தங்களை ஒருகாற் காணவேண்டும் என்றார்,

பர:-

யார்? கோசலை மாதாவா? இதோ புறப்படுகிறேன்.



சத்:-

அவர் அல்லர்...

பர:-

(அலுப்போடு) பின்யார், அந்தப் பெரிய அம்மா?

சத்:-

எனக்குப் பெரிய அம்மா! தங்களுக்கு அன்னை.

பர:-

(பல்லை நற நற வெனக் கடித்து) யார்? என் அன்னையா? எனக்கு அன்னை எங்கே இருக்கிறாள்? பதினான்கு வருடங்களின் முன்பு, அண்ணன் வனம் ஏகியபோது என் அன்னையும் என்வரையில் செத்தே போய் விட்டாள்! அவளின் அபரக் கிரியைகளை மானசீகமாகச் செய்துவிட்டு, தாயும், தந்தையும் அற்ற அநாதையாக நான் இருக்கிறேன்; (கண் கலங்கக் குரல் தளதளக்க) இருப்பேன். அது என்வினைப்பயன்... சத்துருக்க! அந்தப் பயங்கரக் கனவை இந்தக் குதூகல வேளையில் நினைவு படுத்தாதே.

சத்:-

அப்படிச் சொல்லக் கூடாது. எப்படியென்றாலும் அவர் தங்கள் தாய். பத்து மாதம் சுமந்து பெற்ற தெய்வம். ஒரு தடவை செய்த குற்றத்திற்காகக் கடந்த பதினான்கு ஆண்டுக

ளாய் உலகத்தின் முகத்திலேயே விழிக்காமல், கண்ணீரிலே கரையும் துர்ப்பாக்கிய ஜீவன் அவர். அண்ணு! என் பெரியம்மாவிற்காக நான் உங்கள் காலடியில் வீழ்ந்து கெஞ்சுகிறேன். ஒரு தடவையாவது அவரைச் சென்று காணுங்கள். இந்தப் பதினுன்கு ஆண்டுச் சித்திரவதை போதும் அவருக்கு. நான் சொல்லுவதைக் கேளுங்கள்.

பர:-

(கோபத்தின் எல்லையிலே துடிதுடித்து நின்று உணர்ச்சிக் குவியலாக மாறியவனுய்) சத்துருக்க! நிறுத்து உன் பிதற்றலகளை. நீ என் தாய் என்று உரைக்கின்ற பேய் யாரென்று உனக்குத் தெரியுமா? அவள் 'படர் எல்லாம் படைத்தாள், பாவத்தின் செவிலி; உடல் எலாம் உயிர் இலாஎனத் தோன்றும் ஒருத்தி கழற்கால் மாயன் நெடுமையால் அன்ற ளந்த உலகெல்லாம், தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமையால் அளந்தாள்!'' அந்தக் கொடு நீலியா என் தாய்? மடையா?

சத்:-

நீங்கள் எதைச் சொன்னுலும் என் மனம் கேளாது. ஒரு தடவை அவரை நீங்கள் சென்று காணத்தான் வேண்டும். பதினுன்கு ஆண்டுகளாய் இதயத்திற்கும், வாய்க்கும், எண்ணங்களுக்கும் (குரல் தளதளக்க) மக்கட் பாசத்திற்கும் விலங்கிட்டு வைத்து வெங்கொடுமையிலே வெந்துகொண்டிருக்கிருர், என் பெரிய தாய். அவரது பாரவிலங்குகளை உடைத்து விடுங்கள் அண்ணு! உடைத்து விடுங்கள்.

பர:-

(பேய் போன்ற குரலில்) சத்துருக்க! நெஞ்சச் சிதையிலே நீருகிவிட்ட நினைவுகளைக்கிளறுதே. காலக்குழியிலே மூடிச் சமாதி செய்யப்பட்ட பாசப்பிணத்தை வெளிக் கொணர முயலாதே. எனக்குத் தாய், தந்தை, அரசன் இறைவன் எல்லாம் ஒருவனே. அவன் தான் என் அண்ணன் ஸ்ரீ ராமன். அவனைக் காடாள வைத்த காதகியை, பஞ்சுமெல்லடிச் சீதையெனும் பெண் தெய்வத்தை பரலுறுத்த நடக்க வைத்த பாதகியை நான் காண்பதா? முடியாது. ஒருகாலும் முடியாது.

சத்:-

அண்ணு! சிராமன் உனக்கு மட்டுமல்ல; எனக்கும் என் பெரிய தாய்க்கும், ஏன் யாவர்க்குமே தெய்வந்தான். அந்தத் தெய்வம் உன் சிறு செயல் கண்டு சிரித்திடும்; தாயை வதைத்த சேய் என்று உன்னிற் சீறிடும்! தந்தை வாக்கிய பரிபாலனம் செய்த தனயன், தாயின் வேண்டுகோளைப் புறக்கணிக்கும் உன்னைத் தயவின்றித் தள்ளிவிடுவான்.

பர:-

தள்ளட்டும், சீயெனக் கூறிச் செறுக்கட்டும் அத்தனைக்கும் நான் உரியவனே. கைகேயி என்ற அரக்கியின் பாழ்வயிற்றிலே பத்துமாதம் கிடந்தேனே? அதற்கு என் அண்ணன் தரும் எந்தத் தண்டனைக்கும நான் ஆளாக வேண்டியது அவசியந்தான். ஆனல் எனது அண்ணு... என் உயிர், என்னை உதைத்தாலும், அந்தக் கால்களே எனக்குத் தஞ்சம். அதுவே எனக்கு இன்னிழல்.

சத்துருக்க! அதிகம் பேசி ஆவதொன்றில்லை. எக்காரணத்தைக் கொண்டும் 'நான் அவளைக் காண மாட்டேன்' என்று போய்ச் சொல்.. போ...

சத்:-

அ...ண்...ணு!

பர:-

(வெகுளியோடு) பேசாதே. போய் விடு...என் கட்டளையை நிறைவேற்று. போ...

சத்:-

(பெருமூச்சு விட்டபடி) நல்லது; போகிறேன். அடுத்த தடவை வருகையில் என் பெரியம்மா இவ்வுலகில் இல்லையென்ற செய்தியுடன்தான் வருவேன்.

பர:-

அதைவிட மகிழ்ச்சிதரும் செய்தி எனக்கு வேறில்லை. (கேலிச் சிரிப்புடன்) ஆனால் ஒன்று. என் அண்ணன் நாடு நுழையும் இந்த ஆனந்த வேளையில் அபசகுனமாக ஒன்றும் செய்ய வேண்டாம் என்று சொல். சாவிலாவது பரநலத்தைக் காட்டச் சொல், போ...

## காட்சி மூன்று

(அயோத்தி நகர அந்தப்புரத்தில் கைகேயியின் தனி அறை. எலும்புக் கூடாகி விட்ட கைகேயி தனது படுக்கையிலே சாய்ந்து கிடக்கிறாள். மந்தரை அவளருகிலே அமர்ந்திருக்கிறாள். இருமி இருமி ஓய்கிறாள் கைகேயி.

மந்:-

மகாராணி! இந்தக் கூனற் கிழவி மந்தரை. தூக்கி வளர்த்த சிறு பெண் நீ. அரையிலே சிறு பாவாடை அணிந்து விரலைச் சுவைத்து மழலை பொழிந்து நீ திரிந்த போது உன்னைச் சுமந்து விளையாட்டுக் காட்டியவள் நான். பூப்பொலிந்த சிறு கொம்பாய் நீ அழகின் வாயிலிலே அடியெடுத்து வைத்த போது, உன் கைபற்றி நின்று உலகில் எடுத்து உரைத்தவள் நான். இந்த அரண்மனையிலே ஒல்கி ஒசிந்து மணப் பெண்ணாய் நீ வந்த போது உன்னோடு ஒட்டிக் கொண்டு நிழல் போலத் தொடர்ந்தேன். ஆனால் நான் நிழல் அல்ல! உன்னைத் தொடர்ந்த சனீஸ்வரன்! கடந்த பதினான்கு ஆண்டுகளாய்ச் சாகாமற் சாகிறாயே? என் கண் முன்னால் அணு அணுவாய்த் தேய்கிறாயே? மனச்சாட்சியின் வதையால் துடிதுடிக்கிறாயே! இத்தனைக்கும் நான் தானே காரணி?

கைகே:-


(இருமி ஓய்ந்து சிறிதே சிரித்து) நன்றாகப் பேசுகிறாய். நீ கனவு காணும் கவிஞனும் உன் முன்பு தோற்று விடுவான். அத்தனை அழகான வாக்கியங்கள்!

மந்:-

என் வாய்ச் சாதுரியம் நாசமாய்ப் போகட்டும். அந்த வாக்கு வல்லமைதான் உன்னை இந்த நிலைக்குக் கொண்டு விட்டது. 'அணங்கு வாழ் விட அரா அணுகும் எல்லையும் குணங்கெடாது ஒளி விடும் குளிர் வெண் திங்கள் போல் பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும் உணங்குவாய் அல்லை நீ உறங்குவாய்' என்று கூறிக்கொண்டு நான் உன் சயன அறைக்குள் அடியெடுத்து வைத்தேன், பார். அதுதான் உன் அழிவின் தொடக்க நாள்.

கை:-

மந்தரை! அழிவைத் தொடக்கவும் முடிக்கவும் உன்னாலும் என்னாலும் முடியுமென்று நினைக்கிறாயா? உன் வாய்ச் சாதுரியந்தான் இராமனைக் காட்டிற்கு அனுப்பியது என்பது உன் கருத்தா?



மந்:-

இது என்ன புதிய தத்துவம்? எனக்கு விளங்கவில்லை.

கை:-

மந்தரை! எனக்கு இன்று ஐம்பது வயது முடிவடைகிறது; என்னிலும்

உனக்கு ஒரு முப்பது வயதாவது கூடுதலாக இருக்கும இல்லையா?

மந்:-

முப்பது என்ன? சரியாக நீ பிறந்த பொழுது எனக்கு வயது நாற்பத்திரண்டு. இன்று நான் தொண்ணூற்றிரண்டு வயதுக் கிழவி.

கை:-

பார், இன்னும் நடுக்கமின்றிக் கணீர் என்ற குரலில் கம்பீரமாக நீ பேசுகிறாய். உன் உடல்தான் கூனலே தவிர உன மன உறுதி, தேகாரோக்கியம் என்றைக்குமே குறைந்ததில்லை. இத்தனைக்கும் நீ ஒரு பணிமகள். வசதிகள் குறைந்தவள். கிடைத்ததை உண்டு கண்டதிற் படுத்துக் காலமெல்லாம் என் தொண்டைச் செய்கின்றாய். நானோ உல்லாசபுரியில் உலவி வந்த புள்ளிமான். அழகிற்கு வரைவிலக்கணமாக உரைக்கப்பட்டவள், எவ்விதக் குறையும் இன்றி வாழ்ந்தவள். ஆனால் கடந்த பதினான்கு ஆண்டுகளில் தொண்டு கிழவியாகி விட்டேன். பார்த்தாயா? (இருமி ஓய்கிறாள்)

மந்:-

மகாராணி! நீ...

கை:-

உஷ்! அப்படிச் சொல்லாதே...... நான் சொல்வது உனக்குப் புரியவில்லை இல்லையா? மந்தரை! ஒழுங்கு நியதி என்று நாம் கற்பனை பண்ணுவதும் செயற்படுவதும் மாத்திரம் எமது உடல், மன நிலைக்குக் காரணமில்லை, என்பது உனக்குப் புரிகிறதா? வயது செல்லச் செல்ல உடல் வலிவு குறையும் என்றும், ஒழுங்கான போக வாழ்க்கையால் தேகாரோக்கியம் பெறலாம் என்றும் ஒரு விதி இருக்குமானால், எங்கள் இருவர் வரையிலாவது அந்த விதி பொய்த்து விட்டதே...நீ என்ன சொல்கிறாய்?

மந்:-

உடலால் வாழும் வாழ்க்கை நியதியை உள்ளத்தின் நியதி குலைத்து விடுகிறதே? நீ உள்ளத்தால் செத்துக்கொண்டிருக்கிறாய். அந்தச் சாவின் சாயல்கள் நரையாயும் திரையாயும் உன் உடலிலே படிகின்றன. நோயாக உன்னை அரிக்கின்றன.

கை:-

பைத்தியக்காரி! இந்த நோயுந் துன்பமும் எல்லாம் நாமே வருவிப்பன என்றுதானே கருதுகிறாய்? நமக்கு மேலே ஒருவன் உள்ளான். அவன் வகுத்த விதியென்று ஒன்று இருக்கிறது. அதுவே இயற்கையின் விதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அந்த விதியின் கைப்பம்பரங்கள் தாம் நாம்.

மந்:-

(துன்பத்தோடு கேலியும் கலக்க) எல்லை மீறிய துன்பம் உன்னை முனிபுங்கவராக்கிவிட்டது. நீ ஒரு தத்துவ ஞானியாகிவிட்டாய். தத்துவத்தின் 'முதிர்ந்தநிலை பைத்தியம் என்பர் நீ...

கை:-

(இருமி ஓய்ந்து) நானும் ஒருவகைப் பைத்தியந்தான். பிராரத்துவத்தாலோ என்னவோ ஓர் உள்ளுணர்வு என்னுள் தோன்றி என்னை வழிநடத்துகிறது. அந்த உள்ளுணர்வால் நான் செய்யும் செயல்கள் உலகப் போக்கிற்கு மாறாய் இருக்கின்றன. அவை என்னைக் கொடியவளாய்க் காட்டுகின்றன. நான் என்ன செய்வேன்...?

மந்:-

அம்மா! நீ இன்று பெரிய பெரிய உண்மைகளைப் பேசுகிறாய் (கண்ணீர் தயங்க) அணையும் விளக்கின் கடைசிச் சுடர்போல நீ ஏதோவெல்லாம் சொல்கிறாய்...கைகேயி! நீ சொல்வது பிழை என்றோ பைத்தியகாரத்தனந் தானென்றோ என்னாற் கூறமுடியவில்லை. ஆனால்... உன்னை நான் இழந்து விடுவேனோ என்று பயமாக இருக்கிறது.

கை:-

பயப்படாதே, என் இராமனைக் காணும்வரை இந்த உயிர் கெட்டியாகவே இருக்கும். அவனைக் கண்டு

எனது பதினைந்தாண்டு தவத்தின் பயனை அவனிடம் பெற்றுக்கொண்டு தான் நான் மரணத்தை அரவணைப்பேன்......



மந்:-

சூரியன் முன்பு மின் மினிப் பூச்சி போல உன் அறிவிற்கு முன்னால் சக்தியற்றுப் போய் விட்டேன். தயவு செய்து விளங்குமாறு சொல். 'உள்ளுணர்வு' என்றாயே அது என்ன?

கை:-

சரியாக முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் இந்த அந்தப்புறத்தில் அடியெடுத்து வைத்த நாள் உன் நினைவுத் திரையிலே மங்கலாயாவது தெரிகிறதா?

மந்:-

மங்கலாக என்ன? நல்ல தெளிவாகவே தெரிகிறது. என் புறக் கண்ணிலே பார்வை மங்கினாலும் மனக் கண் இன்னும் தெளிவாகத்தான் உள்ளது. சொல்.

கை:-

எனது நாதர் மணமாலையோடு போருக்குப் புறப்பட்டார்; சம்பராசுரனோடு யுத்தம். அந்த வேளையிலே அயோத்தி நகர அந்தப் புரத்திலே ஒரு புரட்சிப் புதுமை நடைபெற்றதே? உனக்கு ஞாபகமிருக்கிறதா?

மந்:-

நன்றாக ஞாபகமிருக்கிறது. அதை மறப்பேனா? சேலையை வரிந்து கட்டிக்கொண்டு, உன் நாதனின் தேருக்குச் சாரதியாய் அமர்ந்தாயே? இந்த நாடே வாயில் விரலை வைத்து 'அட' இவள் ஆணா? பெண்ணா? என்று வியந்ததே! தசரதருக்குக் கேட்கக் கூடியதாய்க்கூட, 'இந்தப் பெண் தசரதனின் கணவன்!' என்று எல்லோரும் பரிகசித்தனரே? அவற்றையெல்லாம் மறந்து விடுவேனா?

கை:-

என் கணவர், எனது காலில் விழாக் குறையாகக் கெஞ்சிக் கேட்டார். 'அந்தப் புரத்திற்குப் போய் விடு' என்று மன்றாடினார். நான் பிடிவாதமாக மறுத்துத் தேரைச் செலுத்திச் சென்றேன். போர் நடந்தது. மீதி கதை உனக்குத் தெரியும்.

மந்:-

உன் நாதரின் உயிரை மயிரிழையிற் காப்பாற்றினாய்... இன்றைய உன் சீர்கேட்டிற்கெல்லாம் காரணமான இரு வரங்களையும் பெற்றாய்...

கை:-

(இருமி ஓய்ந்து) மந்தரை! என்னுள்ளே ஏதோ ஒன்று இருந்து கொண்டு என்னை அன்று தூண்டி வழி நடாத்தியது. 'உனது மாங்கல்யம் நிலைக்க வேண்டுமானால் நீ உன் கணவனோடு போ'' என்று அது என்னைப் பிடர் பிடித்துத் தள்ளியது. அந்த உள்ளுணர்விற்கு நான் மண்டியிட்டேன். பணிந்தேன்...பயன்? என் நாதர் உயிர் பிழைத்தது. எனது நெற்றியிலும் கோசலை சுமித்திரையின் நெற்றிகளிலும் குங்குமம் நிலைத்தது.

மந்:-

(விம்மி அழுதபடி) அதே உள்ளுணர்வாலேதான் உனதும் உன் சக்களத்திகளதும் நெற்றிக் குங்குமத்தை அழிக்கும் வரங்களும் கிடைத்தன இல்லையா?

கை:-

(மிகவும் பலவீனத்துடன் சிரித்து) மந்தரை! கடற்கரையிலே நின்று கொண்டு மறுகரையைப் பார்க்கி

றோம். அங்கு வானம் வந்து கடலுடன் கலப்பது போலத் தெரிகிறது. உண்மையில் அவை அப்படிக் கலக்கின்றனவா?

மந்:-

இல்லை. அது வெறுங்கண் மாயம்!

கை:-

அதே கண் மாயம் போன்றதுதான் எங்கள் தீர்மானங்களும். எனது வரங்கள்தாம் எங்கள் குங்குமத்தை அழித்தன என்பது வெறும் வெளித்தோற்றம். அந்தக் குங்கும அழிவு இராமனைக் காட்டிற்கனுப்பி இராவணாதியரைச் சங்கரிக்க வைத்ததே? அந்தப் பெரிய காட்சிதான் உண்மை. இந்தச் சிறிய அழிவோ உருவெளித் தோற்ற மாத்திரந்தான்! புரிகிறதா?

மந்:

அடிப்பாவி! உன் கணவன் இறந்தது சிறு அழிவா?

கை:-

(ஓ! என்று விம்மிச் சிறிதே சிந்திக்கிறாள். இருமல். பின் அமைதி) என்னைத் தன் கண்ணுள் மணியாகப்பாவித்து, இதயக்கோவிலில் ஏற்றிவைத்த தெய்வந்தான் மகாராஜா! ஆனால். அவரை இழப்பதாகிய மகா பெரிய தியாகத்தையும் செய்து உலகை உய்விக்க வேண்டும், என்று என் உள்ளுணர்வு என்னைத் தூண்டியது. ஆனால்... (விம்மி அழுகிறாள்)

மந்:-

அப்படியானால் எனது வார்த்தைகள், எனது துர்ப் போதனைகள்... இவை உன் மனத்தை மாற்றவில்லையா? நீயாக எடுத்த தீர்மானத்தின் கைப்பாவையாகத்தான் நீ இயங்கினாயா?

கை:-

ஆம், அதுதான் உண்மை. மந்தரை! எனது நெஞ்சிலிட்டு நான் வளர்த்த என் அருமைப் புதல்வன் இராமனைக் காடு செல்லச் செய்தேன். எனது உயிர் நாதரைப் பிரிவு வேதனையால் துடிதுடித்து மாளவைத்தேன். குலகுரு வசிட்டரின் வேண்டுகோள்களையும் புறக்கணித்தேன். பரதன் இராமன் மீது கொண்டுள்ள பற்றுள்ளத்தின் உறுதியை உணர்ந்துங்கூட நான் அவனுக்காக நாட்டைப்பெறுவதுபோல் நாடகமாடினேன். அவனைப்பெற்றதாய் நான். அவனது போக்கு எனக்குத் தெரியாதா? தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினையென்ன நீப்பான் என்பதை நான் முன்பே அறிந்துதான் இருந்தேன்.

மந்:-

(ஆச்சரியத்துடன்) இவ்வளவும் தெரிந்துதான் செய்தாயா?

கை:-

இத்தனை பலமான சக்திகளையும் எதிர்த்துப் போராடுவதற்குக் கேவலம் உனது போதனைகள்தாம் காரணம் என்று நீ இன்னும் நம்புகிறாயா? என்னதான் உயிர்த் தோழியானாலும், கட்டிய கணவன், பெற்ற பிள்ளை, வளர்த்த செல்வன், வாழ்ந்த நாடு இத்தனையையும் அவள் சொல்லைக் கேட்டு ஒருத்தி துறப்பாள் என்று உன்னால் நம்பமுடிகிறதா?

மந்:-

(மௌனம்)

கை:-

(இருமல்...சிந்தனை) என்ன பேச மாட்டேன் என்கிறாய்.

மந்:-

மகாராணி! எனது அகந்தை, பெருமை, திறமையெல்லாம் தோற்று விட்டன. வாயாடியாகிய எனது பிரமை என்னை விட்டுக் கழன்று விட்டது. உண்மையை விடுத்துப் பொய்யின் பின்னால் ஓடித்திரிந்து இளைத்துப் போன என் கண்ணைத் திறந்து விட்டாய்.

கை:-

(அவள் வாயை மூடி) உஷ்...... அப்படியெல்லாம் சொல்லாதே. மண்ணிலே அழுத்தமாகக் கால்களை மிதித்துக் கொண்டு, மேலே பறக்க வேண்டும் என்று கைகளைத் தூக்குகிறேன். கால்கள் மண்ணிலிருந்து விலகவுமில்லை. கைகள் சிறகுகளாகவுமில்லை. அதனால் சித்திரவதைப்படுகிறேன் நான். மேலும் போக முடியாமல்

மண்ணிலும் நிற்க முடியாமல் நான் படும் அவஸ்தை இருக்கிறதே? அப்பப்பா! தாங்கவே கூடவில்லை. அழுகிருள்)


மந்:-

தாயே! நீயா அழுவது?

கை:-

ஆம், மந்தரை! நானேதான், இறந்து போன கணவனதும், காடு சென்ற என் மகனதும் பக்கத்திலிருந்தும் என்னைப் பார்க்க விரும்பாத பரதனதும் பாசத்தினுல் என்னை நானே அழித்துக்கொள்கின்றேன். உலக அபவாதங்களைக் கடந்தேன். ஊராரின் ஏச்சுக்களையும் அலட்சியம் செய்தேன். ஆனால், என் பாசத்தை, என் நெஞ்சை என்னால் வெல்லக்கூட வில்லையே! இராமா... இராமா! மகாராஜா... பரதா!

(சத்துருக்கன் உள்ளே வருகிருன். கைகேயியின் பரிதாபக் கோலங்கண்டு



# உருமாறிய சிற்பம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் சாதனங்களுள் சிற்பங்களுக்கும் முக்கிய இடம் உண்டு.

ரோமன் இத்தாலிய இந்தியச் சிற்பங்கள் முழுமையாகவே இந்நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன

ஆனால் வருங்காலத்தில், இதுவரை பாதுகாக்கப்பட்டு வந்த சிற்பங்கள் யாவும் அழிந்துவிடும் என விஞ்ஞானிகளும் ஆராச்சியாளர்களும் கருதுகிருர்கள். காரணம் நகரங்கள் யாவும் தொழில் மயமாகி வருவதே!

நகரங்களிலிருந்து கிளம்பும் காற்றிலுள்ள உவர்ப்புத்தன்மையும், இரசாயனச் சேர்க்கையும் எவ்வித வலுவுள்ள பொருளையும் அழித்துவிடும் தன்மை கொண்டனவாக இருக்கின்றன.

280 வருட காலத்திற்கு முற்பட்ட ஒரு சிற்பம் (இடது பக்கப் படம்) ஆராயப்பட்டபோது இந்த உண்மைகள் தெரிய வந்தன. இப்படம் 1908-ல் எடுக்கப்பட்டது.

இன்று அச்சிற்பம் உருத்தெரியாத நிலைக்கு வந்துள்ளது. (வலது படம்)

இச் சிற்பம் ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு பழைய கோட்டையின் வாசலில் வைக்கப்பட்டிருக்கிறது.

சகியாது திரும்பப் பார்க்கிறன்.)

சத்:-

பெரியம்மா! நான் வந்த நேரம் சரியாய் இல்லை. பிறகு வருகிறேன்.

கை:-

இல்லை மகனே! இல்லை! உன்னைத் தான் எதிர்பார்த்திருந்தேன். நந்திக் கிராமத்திலிருந்து எப்போது வந்தாய்? (மிகுந்த ஆவலோடு) பரதன் என்ன சொன்னன்? அவன் வந்து கொண்டிருக்கிறனு?

சத்:

(விம்மலை அடக்க முயன்றபடி) தாயே! என்னை ஒன்றும் கேளாதீர்கள். இதயம் இரும்பானலும் பாசத்தீயால் உருக்கிவிடலாம். ஆனல், உள்ளம் கற்றாணை ஆகிவிட்டவர்களுக்கு, பிளந்துறுவதல்லால் வளைந்திடலோ, பாசப் பெரும் பாரத்தைத் தாங்குதலோ இயலாதல்லவா? நீங்கள் பெற்ற பிள்ளையின் இதயம் ஒரு கற்றூண். அதை வளைக்க என்னுற் கூடவில்லை. தோற்றுப் போய்விட்டேன். (போகிறன்)

கை:-

(அழுகையாலே கரைந்து போய்) கடவுளே என்னைப் புரிந்தவர்கள் யாருமே இல்லையா? நான் இப்படியே அணு அணுவாகச் சாவதுதான் உன் விருப்பமோ? இராமா... இராமா! நீ எப்போது வருவாய்...? இவர்கள் கண்களை எப்போது திறப்பாய்?

(மயங்கி விழுகிறள்)

மந்:-

சத்துருக்கா! ஓடி வா. உன் பெரியம்மா மயக்கமடைந்து விட்டாள்.

சத்:-

ஆ! பெரியம்மா! (ஓடி வருகிறன்)

மந்:-

இன்னும் எத்தனை நாளைக்கு இவள் இப்படி வருந்தப் போகிறளோ?

சத்:-

நீ ஒன்றும் எங்கள் பெரியம்மாவிற்காக முதலைக் கண்ணீர் விட வேண்டாம். நாளைக்கு எங்கள் பெரியண்ணு வருகிறர். எல்லாம் சரியாகிவிடும்.

மந்:-

அப்பாடா! கடவுள் காப்பாற்றி விட்டார். என் தோழி பிழைத்து விடுவாள்.

சத்:-

சரி, சரி! அவரின் கால்களைப் பிடி...கவனம். கவனம்...ஆ...இப்படிக் கிடத்து. (திரை)

## காட்சி நான்கு

(பொழுது புலர்வதைக் காட்டும் இசை. (பூபாளம்) பின், தொடர்ந்து மெது மெதுவாக 'ராம்! ராம்! ஜெய ராம்! சீதாராம்' என்ற ஒலி தோன்றி வளர்கிறது. ஸ்ரீ ராமனுக்கு ஜே! சீதா ராமனுக்கு ஜே! தசரத புத்திரனுக்கு ஜே! என்று மக்கள் கோஷிக்க இராமன் சீதா லக்குமண ரோடு நடந்து வந்து அரண்மனை நிலா முற்றத்தில் ஏறி நின்று மக்களுக்குத் தரிசனங் கொடுக்கின்றன். ''என் பிரிய மக்களே!'' என்று இராமன் பேசத் தொடங்குகிறன். மக்கள் அமைதியாய் நின்று கேட்கின்றனர்)

இராமன்:-

என் அன்பு மக்களே! அனைவர்க்கும் வணக்கம். சரியாகப் பதினன்கு ஆண்டுகளின் பின்பு என் தாய் நாட்டு மண்ணிலே மிதித்திருக்கிறேன். தேச மக்களாகிய உயிரிலே இராமனுகிய உடலைச் சேர்த்து வைத்த இறைவனுக்கு என் வணக்கங்கள். உங்கள் எல்லோருடனும் தனித்தனி பேச வேண்டுமென்பது என் ஆசை. அதற்கு முன்பு என் அன்னையரை வணங்கி ஆசி பெறல் வேண்டும். தயவு செய்து ஒரு சில விஞடிகள் எனக்கு அனுமதி கொடுங்கள்.

மக்களுள் ஒருவன்:-

அப்படியே ஆகட்டும். எங்கள் அன்புத் தெய்வத்தைப் பார்த்த ஒன்றே பெரும் பேறு. சென்று வருக.

ஸ்ரீ இராமபிரானுக்கு ஜே!

மக்:-

(அவனைத் தொடர்ந்து சொல்கின்றனர்.)

இராமன்:

(நடந்து கொண்டே) பரதா நீயும் என்னுடன் வா.

பர:-

நல்லது அண்ணு!

இரா:-

(சீதையை நோக்கி) சீதா! நீ உன் தோழியருடன் அன்னையின் அந்தப்புரம் செல்.

(இலக்குமணனும் சத்துருக்கனும் தயங்குகின்றனர்.)

இரா:-

(சிரித்தபடி) என்ன இலக்குமணு! வனத்திலேதான் நிழலாகத் தொடர்ந்தாய். இங்காவது எனக்குச் சிறிது விடுதலை கொடு. நீயும் சத்துருக்க

னும் அண்ணியைத் தொடர்ந்து செல்லுங்கள். நான் என் தாய் கைகேயியிடம் சென்று வருகிறேன்.

இலக்:-

(சீற்றத்துடன்) அண்ணா!.. அவ...

இரா:-

உஷ்! வாயை மூடு...நான் சொல்வதைச் செய். போ.

பர:-

அண்ணா! இது என்ன சோதனை? அந்தக் காதகியின் முகத்திலே யா முதன் முதல் விழிப்பது? அவள் பேயாயிற்றே?

இராமன்:-

(கோபத்துடன்) பரதா என்னைப் பின் தொடர்ந்து வா. எதுவும் பேச வேண்டாம்.

பர:-

(கலக்கத்துடன்) சரி அண்ணா.

(பரதன் இராமனைத் தொடர்கிறான்)

(இராமன் கைகேயியின் அந்தப்புரம் செல்கிறான். அங்கே சென்று கைகேயியின் காலடியில் வீழ்கிறான்)

இரா:-

தாயே! உன் மகன் இராமன் வந்திருக்கிறேன். என்னை ஆசீர்வதி அம்மா!

கை:-

(பதற்றத்துடன் எழுந்து) இராமா! என் செல்வமே! வந்து விட்டாயா?

(அணைத்து முத்தமிடுகிறாள்)

இராமன்:-

அம்மா நான் சென்ற இடமெல்லாம் உன் அன்பும், பாசமும் என்னைத் தொடர்ந்து வந்தன. அவை எனக்குப் புத்துணர்வும் புதுவலுவும் தந்தன, தாயே! வெற்றி வீரனாகத் திரும்பினேன். (பரதனை நோக்கி) பரதா! என்ன இது? வந்த நேரத்திலிருந்து மரம் மாதிரி நிற்கிறாயே? உன் தாயை விழுந்து வணங்கு.

பர:-

அண்ணா! நீ தெய்வம் போன்றவன். உன்னால் பகைவரையும் மன்னிக்க முடியலாம். விஷசர்ப்பத்தையும் வெறிகொண்ட வேங்கையையும் கூட நீ அணைத்து மகிழலாம். ஆனால் நான் மனிதன். எனக்கு மாளா வசையையும் உனக்கு வனவாசத்தையும், என் அண்ணிக்குப் பெரும் துன்பத்தையும் தந்த பயங்கர பைசாசத்தை என்னால் மன்னிக்க முடியாது!

கை:-

(இராமரை நோக்கி) மகனே......! நீதான் என்னைப் புரிய வைக்க வேண்டும்! என் பிள்ளைகளுக்கு மீட்டும் தாயாக மாறும் பாக்கியத்தை நீதான் அருள வேண்டும். கடந்த பதினான்காண்டுகளில் இன்று பரதனைக் காண்பது இரண்டாவது தடவை! (அழுகிறாள்.)

பரதா இப்படி வா!

அண்ணா!

உன் அன்னையாகிய இந்தத் தெய்வத்தை வணங்கு...உம்...

அண்ணா! என்னைச் சோதியாதே!

சோதனை அல்ல இது! ஐந்தும் மூன்றும் எட்டு எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை, உன் தாய் ஒரு பெண் தெய்வம் என்பதும்...

பரதா 'அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும் துரக்க நல்லருள் துறந்தனள் இத்தூமொழி மடமான்' அவளின் இரக்கமின்மையினாலன்றோ என் புகழமுதை இவ்வுலகம் சுவைக்கின்றது?

தன்னைக் கொடுத்துத் திரியைச் சுடராக்கி இருளை ஒளியாக்கும் நெய் போன்றவள் உன் அன்னை. இராவணாதியரைத் தொலைக்கவும், தேவர்க்கும் மனிதர்க்கும் இன்பத்தை அளிக்கவும் அவள் தன் கௌரவத்தை, தன் மானத்தை, ஏன் தன் கணவனையே இழந்து நின்றாள்! அவளது மகா தியாகத்தை, இந்தச் சின்னஞ் சிறு இருட்டறையிலே அவள் எவ்வளவு அமைதியாகச் செய்து முடித்து விட்டாள்?

உலகம் அறிந்த கைகேயி வெறும் உருவெளித் தோற்றம். உண்மைக் கைகேயி இதோ இந்த அன்புத் தாய்! அவளை வணங்கக் கிடைப்பது மகத்தான பாக்கியம். அவளைத் தாயாக அடைந்த நீ பாக்கியசாலி!

பர:-

(குரல் தளதளக்க) அண்ணா! என் தாயை நான் புரிந்துகொள்ளவில்லை இப்போதுதான் என் கண்கள் திறந்தன. தாயே என்னை மன்னித்து விடு.


(விழுந்து வணங்குகிறான். கைகேயி அவனைத் தூக்கி உச்சி மோகர்கிறாள்)

கை.-

(ஆனந்தக் கண்ணீர் மல்க)இராமா! உன் வனவாசத்தோடு என் மனவாசமும் முடிந்தது!

(திரை)

# எந்த வடிவிலும் உணர்ச்சி




சைகைமொழி பல நூற்றுண்டு காலமாக நிலவி வரும் பழைமை மிக்கது. மொழி தோன்றுவதற்கு முன்னர், சொல்வளம் பெருகுவதற்கு முன்னர், காட்டு மனிதன் கைகளாலும் கண்களாலும் தனது மனஉணர்ச்சிகளை மற்ற மனிதனுக்குத் தெரியப்படுத்தி வந்தான். பொதுவாக எல்லோருமே சைகைகளாலேயே பேசிவந்தார்கள்.

பெண்கள் அல்லது ஆண்கள் சில சமயங்களில் தமது தலையிலே கைவைப்பதை நீங்கள் காணக்கூடும். இப்படிக் கைவைத்ததும் அவர்கள் என்ன சொல்ல வந்தார்கள் என்பது புரிந்துவிடுகிறது. நெற்றியை ஸ்பர்சிக்கும் அந்தக் கை வார்த்தை வடிவமின்றி உணர்ச்சியைப்புரிய வைத்துவிடுகிறது.

காலம் விரைவாக மாறியது. காட்டு மனிதர்கள் சைகை புரியவும் ஒலி எழுப்பவும் மட்டுமன்றிப் பேசவும் தெரிந்துகொண்டார்கள். அவர்களது சூழ்நிலை, சுற்றுடலைப் பொறுத்து மொழிகள் உண்டாகின. ஆனாலும் எத்தனையோ நூற்றுண்டுகள் கழிந்து, மொழிகள் வளர்ச்சியடைந்து விட்ட பொழுதிலும் இன்னும் உலகிலுள்ள மக்கள் பலரும் சைகை மொழியை உபயோகிக்கவே செய்கின்றனர். அவர்களது அளவுகடந்த சில உணர்ச்சிகள் வார்த்தை வடிவில் வெளிப்படாது சைகைகளாகப் பரிணமிக்கின்றன. இந்தியாவிலும் ஈழத்திலுமுள்ள மக்களது சைகைகள் பெரும்பாலும் ஒருமைப்பாடான அர்த்தத்தைக் கொண்டவை.


ஒருவர் நெற்றியிலே கைவைத்து சற்றே கலக்கத்துடன் முகம் தாழ்த்தினுல் ''இது எமது விதி'' என்ற துயரப் பெருமூச்சு தொனிப் பொருளாகிறது. முஸ்லீம்கள் மத்தியிலும் இந்துக்கள் மத்தியிலும் இதனைக்காணலாம்.





சில சமயங்களில் பெண்கள் தமது வாயிலே கையை வைத்துக் கொண்டு முகம் மலர நிற்கிறார்கள். இந்தச் சைகை பெண்களுக்கு மட்டுமே உரித்தானது. இதில் பெண்மையின் அடக்கமும் அதே நேரம் தாங்க முடியாத ஒரு களிப்புணர்ச்சியும் சைகை மொழியாகப் பிரதிபலிக்கிறது. கையினால் வாயைப் பொத்தி ஒரு பெண் மறைப்பது போலப் பாவனை செய்தால், அவள் புன்னகை புரிய விரும்புகிறாள் அல்லது சிரிக்க விரும்புகிறாள் என்பதே அர்த்தமாகும். அவளைச் சுற்றிய சூழ்நிலையில் ஏதோ சிரிப்புக்குரிய விடயம் நிகழ்ந்து விட்டது. ஆனாலும் பெண்மைக்குரிய அடக்கமும் பண்பாடும் தன்னிச்சையாக அவளைக் கெக்கெலி கொட்ட அனுமதிக்கவில்லை. எனவே உணர்ச்சியை அவள் எவ்வளவு அமைதியாக வெளிப்படுத்தி விடுகிறாள்!

*



குழந்தையைப் பார்த்ததும் தாய்மார் தமது இருகைகளாலும் தமது நெற்றியிலே முட்டிக்கொள்கிறார்கள். இப்படி அவர்கள் இரண்டு மூன்று தடவை செய்து கொள்வர். தமது குழந்தைக்குப் பிறரது கண்பட்டு, தீங்குகள் விளைந்து விடலாம் என்ற அச்சத்தின் காரணமாகக் குழந்தைக்கு எவ்விதத் தீங்கும் வராமல் அது தம்மை வந்தடையும் படி வெளிப்படுத்துகிறார்கள்.

இப்படி எத்தனையோ சைகைகள்! அவற்றின் பொருள்கள் தான் எவ்வளவு ஆழமானவை! உணர்ச்சி பூர்வமானவை!

*

# அஞ்சலி

## ஏப்ரல் மாத இதழ்

## மலையகச் சிறப்பு மலராக மலரும்

### மலையகத்தின் முன்னணி எழுத்தாளர்கள்

இர. சிவலிங்கம்
கே. கணேஷ்
தெளிவத்தை ஜோசப்
பேராதனை நா. சுப்ரமணியம்
சி. வி. வேலுப்பிள்ளை
என். எஸ். எம். ராமையா
எம். வாமதேவன்
ஏ. பி. வி. கோமஸ்
பி. மரியதாஸ்
நயீமா ஏ. பஷீர்
பூரணி
மாத்தளை மலரன்பன்
சலமன் ராஜ்
சி. பன்னீர்ச் செல்வம்
மு. நித்தியானந்தன்

ஆகிய பலரின் சிறந்த படைப்புகளுடன்
முற்றிலும் மலையக மணங்கமழ
வெளிவருகின்றது

'அஞ்சலி'க்கு

எமது

நல்வாழ்த்துகள்

K. சுப்பையா அன் கோ,
8, மயூரி ஒழுங்கை,
கொழும்பு 11

With

Best

Complements

From

**RAHUMAN PRODUCE STORES**

22 – 26, OLD MOOR STREET,

COLOMBO 12

# ஜுப்பிட்டர்ஸ்

**(AIR CONDITIONED)**

புதிய ஜவுளி மாளிகை நவ நாகரிகமான பிடவைத் தினுசுகளை விற்பனை செய்து அறிமுகப் படுத்துகின்றது.

நைலோன், நைலெக்ஸ் பிடவைகள், ஹகோபா மணிப்புரி சாரிகள், தினசரி பாவனைக்கு கந்த சேட்டிங், சூட்டிங், ரெடி மேட் உடுப்புகள் குறைந்த விலையில் விற்பனை செய்கிறார்கள்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

★ ★



**Jupiters**

சாரி ஸ்பெஷலிஸ்ட்
194 மெயின் வீதி
கொழும்பு 11

போன்: 27571

 Registered as a Newspaper in Ceylon.



*the*

*CHOICEST*

*RANGE*

*of*

**SAREES**

**&**

**FABRICS**

*- - as well as - -*

★ GENT'S WOOLEN SUITINGS,

★ SHIRTS & SHIRTINGS

★ PYJAMA MATERIALS, SARONGS, BANIYANS & UNDERWEARS

★ CHILDREN'S READYMADE GARMENTS & GIFT SETS

★ FURNISHING FABRICS

★ BEDSPREADS, PILLOW CASES, HOUSEHOLD LINEN

★ TRAVEL GOODS

ETC. ETC.

**RANJANA STORES**

52, Bankshall Street — COLOMBO 11

T'grams: **'RANJANAS'** T'Phone: **25851**

198, நீர்கொழும்பு வீதி, வத்தளையிலிருக்கும் ஏ. எம். செல்வராஜா அவர்களால் 79, முதலாம் மசூதி ஒழுங்கை, கொழும்பு-12 ல் இருக்கும் சித்ரா அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது